Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 6.00


# ஈழநாதம்

THE EELANAATHAM · மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 23 | 08.08.94 | திங்கட்கிழமை | ஓசை 171

## உலக எயிட்ஸ் நோயாளர் தொகை நாற்பது லட்சமாக அதிகரிப்பு

உலக எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை 40 லட்சத்தையும் தாண்டி விட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. பத்தாவது சர்வதேச எயிட்ஸ் நோய் மாநாடு நேற்று ஜப்பானில் ஆரம்பமாகியது தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு நடைபெறும் இம்மாநாட்டில் உலக நாடுகளிலிருந்து பல வைத்தியர்களும் நிபுணர்களும் கலந்து கொண்டுள்ளனர். இம்மாநாட்டின் தலைவர் உரைநிகழ்த்துகையில் இதுவரை எயிட்ஸ் நோயைக் குணப்படுத்தவென எந்தவித (6ஆம் பக்கம் பார்க்க)



பலாலி விமானப்படைத் தளத்தின் மீது கரும்புலித் தாக்குதல் நடத்தி வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப்படங்களைத் தாங்கிய உலங்கு வானூர்திவடிவத்திலான ஊர்தி பவனி சென்றபோது பிடிக்கப்பட்ட படம்

## வீரச்சாவெய்திய கரும்புலிகளின் நினைவுநாள் எழுச்சிகர அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானப் படைத் தளத்தினுள் ஊடுருவிச்சென்று வெற்றிகரமாகக் கரும்புலித் தாக்குதல் நடாத்தி வீரச்சாவெய்திய மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும்முகமாக நேற்று கோட்ட ரீதியாக மூன்று இடங்களில பொதுக் கூட்டங்கள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன

நேற்று மாலை கோண்டாவில் பஸ் டிப்போ முன்னாலும், மீசாலை பூவடிப் பிள்ளையார் கோவிலடியிலும் பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியிலும் வீரவணக்க கூட்டங்கள் நடைபெற்றன.

இந்த வீரவணக்க கூட்டங்களில் ஈகச்சுடரேற்றல், உருவப்படங்களுக்கு மாலை அணிவித்தல், மலரஞ்சலி, மௌன வணக்கம், தாயகப்பாடல் இசைத்தல் ஆகியவற்றை அடுத்து பொதுக்கூட்டம் ஆரம்பமானது.

விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் பலர் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மூன்றுதினங்களாக வீதிகள், மற்றும் பொது இடங்கள் அனைத்திலும் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வண்ணம் வாழை தோரணங்கள் கட்டப்பட்டு இருந்தன

### வடமராட்சியில்

வடமராட்சியில் உருவப் படங்கள் தாங்கிய ஊர்தி பருத்தித்துறை பஸ் நிலைய மைதானத்திற்கு நேற்று மாலை 5-10 மணியளவில் மெத்தைக் கடைச் சந்தியில் இருந்து நகர்ந்தது.

இவ் ஊர்திக்கு முன்பாக மகளிர் அணியின் பான்ட் வாத்திய இசை முன்செல்ல ஊர்திக்குப் பின்பாக போராளிகள் அணிவகுத்துச் செல்ல மக்களும் அதனைத் தொடர்ந்து அணிவகுத்துச் சென்றனர். மைதானத்தில் மாவீரரின் உருவப்படங்கள் வைத்து மாவீரர்களுக்கு ஈகச் சுடரேற்றி மலர்மாலை சூட்டப்பட்டது. மௌன அஞ்சலியை அடுத்து புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் ஒலிக்கப்பட்டது. மக்களும் இணைந்து ஒலித்தனர்.

மாவீரர்கள் ஈகச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஏற்றி வைத்தார். பொதுக் கூட்டம் வடமராட்சி வடக்கு கடற்புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் திரு. அழகன் தலைமையில் ஆரம்பமானது. தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், யாழ் மாவட்ட மாவீரர்பணிமனைப் பொறுப்பாளர்திரு. எழிலன், திரு. அரசண்ணா (6 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தின் போக்கில் தேர்தல் முடிவு மாற்றம் எதையும் ஏற்படுத்தாது

## குப்பைக்குள் கைக்குண்டு

காணியைத் துப்பரவு செய்தவர் காணிக்குள் இருந்த கைக்குண்டு வெடித்ததால் படுகாயம் அடைந்தார்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது, தனது காணியைத் துப்பரவு செய்து குப்பைக்கு தீ மூட்டிய வேளை அதற்குள் இருந்த கைக்குண்டு வெடித்ததால் மீசாலையைச் சேர்ந்த த. வடிவேலு (52 வயது) என்பவர் காலில் படுகாயம் அடைந்துள்ளார். (86)

...சேர்ந்த த. வடிவேலு (52 வயது) என்பவர் காலில் படுகாயம் அடைந்துள்ளார். (86)

# இராணுவ அதிகாரிகள் குழப்பமடைய தேவையில்லை என்கிறார் ஹமில்டன்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தம் தொடர்பாக தீர்மானிக்க வேண்டியது பாதுகாப்பு அமைச்சு ஆகும். எனவே பொதுத்தேர்தலில் யார்வெற்றி பெற்றாலும் இது குறித்து படை அதிகாரிகள் எவரும் குழப்பமடைய தேவையில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

சென்ற வாரம் நடைபெற்ற வைபவம் ஒன்றின்போது இக்கருத்தை தெரிவித்துள்ளார். இவ்வைபவத்தில் ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் மற்றும் படை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஆட்சிமாற்றம் ஏற்படலாம் அல்லது இக்கட்சி தொடர்ந்து ஆட்சியை அமைக்கலாம். ஆனால் ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சராக இருப்பார். ஜனாதிபதி இப்பிரச்சினைகுறித்து எடுக்கும் முடிவுக்கு கட்டுப்பட வேண்டியது படையினரின் கடமை எனவும் அவர் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விமான நோட்டம்

பருத்தித்துறையில் நேற்று நடைபெற்ற பலாலி முகாம தாக்குதல் புரிந்த மாவீரர்களின் கூட்ட மைதானத்தை பலாலியில் இருந்து வந்த 'புக்காரா' குண்டு வீச்சு விமானம் ஒன்று சுமார் 20 நிமிடங்கள் சுற்றி வட்டமிட்டவாறு வானில் பறந்தது எனினும் கூட்டம் தடையின்றி நடைபெற்றது

## இன்று வரும்

'றுநணு' கப்பல் நேற்று மாலை 7.00 மணியளவில் காங்கேசன்துறைதுறைமுகம் வந்துசேர்ந்தது இக்கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது(யோ)

# பலாலி பாதுகாப்பு அமைப்பில் மாற்றம் காவல் நிலைகளும் இடம்மாறின

(கொழும்பு)

பலாலி கூட்டுத்தளத்தினுள் விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அணி ஊடுருவி நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து அங்குள்ள பாதுகாப்பு கட்டமைப்புகளில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.

அங்கு கடமையாற்றும் படை அதிகாரிகள் வேறு நிலைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் காவலரண்கள் மற்றும் பாதுகாப்பு நிலைகளில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கரும்புலிகளின் தாக்குதலையடுத்து பலாலி கூட்டுத்தளத்தின் பாதுகாப்புக்குறித்து நீண்டநேரம் செய்யப்பட்ட ஆய்வின் பின்னர் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சக்கோட்டைப் பகுதியில் மாலையிலும் தாக்குதல்

பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதி மீண்டும் இரண்டாவது தடவையாக கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்கானது. வெற்றிலைக்கேணியிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'டோறா' படகு கடலில் சில மணிநேரம் தரித்து நின்று தாக்கியது.

இச்சம்பவம் கடந்த சனியன்று பிற்பகல் 2.35 மணியளவில் நடைபெற்றது. அதன்போது வீதியில் சென்றவர்கள் வீதியால் வந்தவர்கள் பாதுகாப்புத்தேடினர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஓட்டோவை வழிமறித்து பணம், நகை கொள்ளை

(தென்மராட்சி)

கிளாலியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த கொழும்பு பயணிகளின் ஓட்டோவை எழுதுமட்டுவாழ் பகுதியில் வழிமறித்தகொள்ளையர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை கிளாலியிலிருந்து வந்து கொண்டிருந்த ஓட்டோ ஒன்று குடிசனம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறை தொடர்ந்தால் தேர்தல் ஒத்திவைக்கும் சூழ்நிலை வரலாம்

## தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லுமாயின் அது தேர்தலை ஒத்திவைக்கவேண்டிய நிலையை ஏற்படுத்தும் என சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக நேற்றிரவு ரூபவாகினியில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இந் நிலையைக்கருத்தில் கொண்டு சகல கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் செயற்பட வேண்டும் என்றும் விசேடமாக மாவட்ட கட்சி அமைப்பாளர்கள் இது தொடர்பாக கவனம் செலுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்

நாளுக்கு நாள் தேர்தல் வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன. சிறிலங்காவில் இதுவரைகாலமும் இவ் வளவு எண்ணிக்கையில் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறவில்லை. இவ்வாறு வன்முறை அதிகரித்துச் சென்றால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலை ஏற்படும் என மேலும் அவர் கூறினார்.

இம்முறை இடம் பெயர்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றுக்குநம்பிக்கையானவரே பிரதமராக அழைக்கப்படவேண்டும்

## பொ. ஐ. மு. தேர்தல் அரசியல் ஆலோசகர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவரையே ஜனாதிபதி பிரதமர் பதவிக்கு அழைக்க வேண்டும்- ஜனாதிபதிக்கு நம்பிக்கை வாய்ந்தவர்களை அவர் பிரதமர் பதவிக்கு அழைக்க முடியாது என சுதந்திர கட்சியின் உப தலைவர்களில் ஒருவரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் அரசியல் ஆலோசகருமான பேராசிரியர் ஜே.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.சி.யின் சிங்கள சேவையான சந்தேசிய வானொலிக்கு அவர் அளித்த பேட்டியில் இக்கருத்தைதெரிவித்துள்ளார்- அவர் தொடர்ந்துதெரிவிக்கையில் பொது ஜன ஐக்கியமுன்னணி ஆகக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர்கள் சேவை இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கல்வி ராஜாங்க அமைச்சின் செயலாளர் இது பற்றி கூறுகையில் ஆசிரியர் சேவை சிபார்சுகளின் அடிப்படையில் 1லட்சத்து 90 ஆயிரம் ஆசிரியர்கள் ஐந்து சம்பள அமைப்புக்களின் கீழ் கொண்டுவரப்படுவார்கள் என்றார்.

மேலும் ஆசிரியர் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆசிரியர் தொழிற் சங்கங்கள் பலவற்றுடனும் ஆலோசிக்கப்பட்டு அவர்களது சம்மதங்களும் பெறப்பட்டன. இத்தகைய நல்விளக்கம் அமைச்சிற்கு சிறந்த பலத்தை அளிக்கின்றது ஒவ்வொரு ஆசிரியரையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒவ்வொரு தொழிற் சங்கமும் அரசின் செயல்களுக்கு உடன்பாடு தெரிவித்துள்ளன. இதன் பலனாக பயிற்சி பெறாத ஆசிரியர் ஒருவருக்கு தற்போது வழங்கப்படும் 2010 ரூபா சம்பளம் 2710 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இது பயிற்சி பெற்ற ஆசிரியரின் தற்போதைய சம்பளம் ஆகும். பயிற்சி பெற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட மாணவர் அரங்கு

தமிழீழ பொதுக் கல்வித் தோ்வை முன்னிட்டு நாளை விசேட மாணவர் அரங்கு வெளிவருகின்றது. இதில கணிதம், விஞ்ஞானம, சமூகககல்வி ஆகிய பாடங்களுககான பரீட்சை வழிகாட்டிகள வெளிவரவுள்ளன.

## வரி விளம்பரம்

ந: சுந்தரம்பிள்ளையின் ‘அக்கரைச் சீமையில்’

இங்கிலாந்திற்குச் செல்லாமலேயே அந்த நாட்டையும் இலண்டன் மாநகரத்தையும் கண்முன் காட்சிப்படுத்த முனைந்துள்ளார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார் :- ஈழநாதம் வெள்ளி மஞ்சரியில் வவுனியா திலீபன் (8898)

## வினாடிவினா போட்டி

1994 நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினரால் தமிழீழத்தை தெரிந்து கொள்ளுங்கள் என்னும் வினா விடைப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையே பலசுற்றுக்களாக நடாத்தப்படவிருக்கும் இப்போட்டியில் முதலிடத்தை பெறுபவருக்கு முழுநிறைவான தங்கப்பதக்கமும் ஏனையோருக்கு பல பெறுமதிமிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கிறது.

எனவே மாணவர்கள் அனைவரும் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்குமுன் பூர்த்தியாக்கி அனுப்பி போட்டியில் பங்குபற்றுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது.

## இரட்டைச் சூட்டடுப்பு

சூடா நாட்டில் ஏற்பட்ட விறகுத்தட்டுப்பாட்டை கருத்திற் கொண்டுஇடம்பெயர்ந்து செற்பலி பண்டிதர் குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்குகடன் அடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்புக்களை தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவன சக்திப்பகுதியினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இந்த இரட்டைச் சூட்டடுப்பு பாவனையால் சமையலுக்கு வழமையான பாவனையில் அரைப்பங்கு விறகே தேவைப்படுவதால் குடியிருப்பில் வசிக்கும் வறியமக்களுக்கு உதவியாக அமைந்துள்ளது.

## சலகூடங்கள் அமைப்பு

பாடசாலைகளில் காணப்படும் சுகாதாரப்பிரச்சினையை கருத்திற் கொண்டு மருதனாமடத்தில் இயங்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஐந்து பிரிவுகளைக் கொண்ட சலகூடம் பிரமாண அடிப்ப


நியு லலிதா ஜுவல்லர்ஸ்
ஆதாவுடன்
புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும்
மாபெரும்
மாட்டுவண்டி சவாரிப்போட்டி
காலம்:- 8-8-1994 திங்கட்கிழமை
இடம்:- விக்னேஸ்வரா சவாரித்திடல்
07-08-1994 ஞாயிறு நடைபெறவிருந்த போட்டி இன்று 8.8.94 திங்கட்கிழமை நடைபெறும்.
புதிய லலிதா நகைமாடம்
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10059)



பதவி வெற்றிடம்

யாழ் நகரில் அமைந்துள்ள பணிமனை ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. தட்டெழுத்தாளர்:
தகுதி: தமிழ்த்தட்டெழுத்தில் சான்றிதழும் நல்ல அனுபவமும் உள்ளவர், ஆங்கில தட்டெழுத்தில் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
வயது: 20 வயதிற்கு மேற்பட்டோர்.

02. எழுதுவினைஞர்:
தகுதி: க.பொ.த. உ/த பரீட்சையில் சித்தியடைந்தவர்: முன் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்
வயது: 20 வயதிற்கு மேற்பட்டோர்

03. வெளிக்கள உத்தியோகத்தர்:
தகுதி: க.பொ.த உ/த பரீட்சையில் சித்தியடைந்தவர். விண்ணப்பதாரர்கள் 35 வயதிற்கு மேற்படாதவராயும் உயர்ந்த செயலூக்கம், உடல்நலம் உடையவராக இருத்தல் வேண்டும்.

04: வாகன சாரதி:
தகுதி: சிறந்த முன்னனுபவம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்.
வயது: 20 தொடக்கம் 40 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 15.08.1994.
குறிப்பு:- விண்ணப்பதாரரின் சுயவிபரம், கல்வித்தகைமை விசேட தகைமை ஆகியவற்றை அவரின் சொந்த கையெழுத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

விளம்பர இல:- 345
மே-பா ஈழநாதம்,
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (9056)



யாழ் மாவட்ட
அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்


# ஜனாதிபதி பதவிவிலகுவதே சிறந்த நடவடிக்கை

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை தொடர்ந்து ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பை விடுப்பதே ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா செய்யக் கூடியதும், வரவேற்கப் படக்கூடியதும் ஆகும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே இன்னும் சில காலம் மட்டுமே பதவி வகிக்கக்கூடிய நிலையிலுள்ள ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனது பதவியைத் துறந்து சுதந்திரமான தேர்தல் ஒன்று நடைபெற வழிவிடுவதே சிறந்தது என அவ் அவதானிகள் மேலும் கூறினர்.


2ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு: 1976 - 02 - 19

வீரச்சாவு: 1992 - 08 - 08

பலாலி [வளலாயில்] இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவடைந்த

லெப்டினன்ட்
ஆனந்தக்குமார்/சாள்ஸ்
(பாலசுப்பிரமணியம் தெய்வேந்திரன்)

இரண்டு ஆண்டுகள் இரண்டு நொடியாய்
உருண்டு மறைந்திட இருண்ட மனதில்
திரண்டு நிற்கும் நீங்கா நினைவுகள்
நெஞ்சில் பூத்து நெருஞ்சி முட்களாய்
நெருக்கிக் குத்த உள்ளும் புறமும்
ஈழத்தமிழரின் இருண்ட பூமியை
வரண்டநீரின் வரிகளின் கோலத்தை
மாற்றியமைக்க மரணத்தை ஏற்றாய்
மாவீரனாய் மண்ணில் மரித்தாய்
கண்ணில் கரைந்தாய் வீர காவியமானாய்.

சிவன் கோவிலடி,
சித்தன்கேணி.
- குடும்பத்தினர்

(9043)



1ஆம் ஆண்டு நினைவஞ்சலி




## நினைவு கூருகின்றோம்...

### 08-08-1994...

1990-ம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2ம் லெப். மாறன்** (தங்கராசா கிருஷ்ணன் - கச்சாய்வீதி, சாவகச்சேரி - யாழ்)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் விழுப்புண்ணடைந்தநிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**நௌசாத்** (நவரட்ணம் பவானந்தா - இளவாலை வடக்கு - யாழ்)

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**குஞ்சன்** ( - - கண்டி)

சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண்ணடைந்து மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**வசந்தா** (மஞ்சுளாதேவி அந்தோனிப்பிள்ளை - வண்ணாங்குளம் - முல்லைத்தீவு)

1991-ம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். விசா** (பிறின்ஸ்ராகல் ராஜன் - 6-ம் கட்டை, பாலையூற்று - திருமலை)

**2-ம் லெப். இளங்கதிர்** (ஆறுமுகம் ரகுகுமார்- பாலையூற்று - திருமலை)

**2-ம் லெப். அமலதாஸ்** (நடராசா சிறீதரன்- அன்புவழிபுரம் - திருமலை)

**விக்ரர்** (இராசரத்தினம் சத்தியபாலன் - புல்மோட்டை - திருமலை)

**விஜி** (பாலச்சந்திரன் இலங்கேஸ்வரன் - புதுக்குடியிருப்பு, குச்சவெளி - திருமலை)

**கவி** (யோகராசா சிவபாலன் - 4-ம் கட்டை, புல்மோட்டை - திருமலை)

**தியாகராஜன்** (முருகையா ராஜ் - பாலையூற்று- திருமலை)

**கில்பேட்** (ஜோன்சிங்கம் செல்வராஜா - 5-ம் வாய்க்கால் - பன்குளம் திருமலை)

**ஜீவராசா** (சின்னையா நாதன்-தண்ணீரூற்று, முள்ளியவளை-முல்லைத்தீவு)

**பில்லா** (வேலாயுதபிள்ளை கருணன் - அம்பலவன் பொக்கணை-முல்லைத்தீவு)

**செல்விற்** (வேலாயுதம் நாகேஸ்வரன்-தண்வான், நெடுங்கேணி-மணலாறு)

**2-ம் லெப்.சிவபாலன்** (மருதுப்பிள்ளை சத்தியநாதன்-பூந்தோட்டம், வவுனியா)

**2-ம் லெப்.வாசு** (கருப்பையா மாணிக்கம் - பூந்தோட்டம்-வவுனியா)

**லெப்.காந்தி** (கந்தசாமி கிருஷ்ணகுமார் - வன்னிவிளாங்குளம்-மாங்குளம்)

**லெப்.வரன்** (கந்தர் தர்மகுலசிங்கம் - சிவன்கோயிலடி, உருத்திரபுரம்-கிளிநொச்சி)

**டலஸ்** (குழந்தைவேல் ஜெயரட்ணம் - அப்பாள்குளம்-கிளிநொச்சி)

**ஜோதி** (பாலசிங்கம் றூபராசா-சிவன் கோயில்வீதி, உருத்திரபுரம்- கிளிநொச்சி)

சலகூடங்களஅமைப்பு

பாடசாலைகளில் காணப்படும் சுகாதாரப்பிரச்சினையை கருத்திற் கொண்டு மருதனாமடத்தில் இயங்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஐந்து பிரிவுகளைக் கொண்ட சலகூடம் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியிலிருந்து தேச நிர்மாணிகளால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் இடம்பெயர்ந்து வந்துள்ள இப்பாடசாலை மாணவர்களின் சிரமங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன.

## சந்திரிகாவின் ஆதரவாளர்கைது

(கொழும்பு)

அவிசாவளையில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவி சந்திரிகா குமாரணதுங்காவின் படமொன்று அலங்கரிக்கப்பட்ட வாகனமொன்றில் கொண்டு சென்றவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். படம் கொண்டு செல்லப்பட்ட வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது.

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு மேற்கு அந்திரானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று பகல் 10·30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். பதினைந்து நாட்கள் திருவிழாவுடன் 16 ம் நாள் பூங்காவனத்துடன் உற்சவம் நிறைவு பெறும்.

## கூட்டுறவு தின விழா

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின், கூட்டுறவுத் தின விழா இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் சங்கத்தலைவர் மா. குமாரசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

---

மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (9056)

---

## யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்

# அறிவித்தல்கள்

### (1) மெய்வல்லுநர் சட்டவிதிகளில் தேர்ச்சிபெற்ற அலுவலர்களைத்தெரிவு செய்வதற்கான பரீட்சைகள்:-

மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். பரீட்சார்த்திகளுக்கான நேர அட்டவணை மற்றும் அனுமதி அட்டை ஆகியவை அவர்களின் வீட்டு விலாசங்களுக்கு அஞ்சல் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 12-08-1994 வெள்ளிக்கிழமைக்கு முன் அவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் 13 - 08 - 1994 சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையான நேரத்தில், யாழ். இந்துக் கல்லூரியில் சங்கச் செயலாளரைச் சந்திக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

### (2) தேர்ச்சி பெற்ற அலுவலர் பட்டியல் தயாரித்தல்:-

யாழ் மாவட்டத்தில் மெய்வல்லுநர் போட்டிகளை நடத்துவோருக்கு வழங்குவதற்கு வசதியாக - யாழ் மாவட்டத்தில் உள்ள - மெய்வல்லுநர் சட்டவிதிகளில் தேர்ச்சி பெற்ற அலுவலர்களின் பெயர்ப் பட்டியலை எமது சங்கம் தயாரித்து வருகின்றது. எனவே 01-08-1994 இற்கு முன்னர் இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்பட்ட. மெய்வல்லுநர் அலுவலர்களுக்கான பரீட்சைகளில் சித்தியடைந்தோர், அதற்கான அத்தாட்சியை நிரூபிக்கும் ஆவணங்களின் பிரதியுடன் அதுபற்றிய தகவலை 15 - 08 - 1994 இற்கு முன்னர் எமக்குத் தெரியப் படுத்துமாறு வேண்டுகிறோம்.

### (3) கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள்:-

எமது சங்கம் நடத்தும் யாழ் மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9, 10, 11 ஆம் திகதிகளில் யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவுள்ளன. 18 மற்றும் 20 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனிப் போட்டிகள் இடம் பெறும்.


விண்ணப்ப முடிவு தினம் 31-08-1994 ஆகும். விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விபரங்களை செயலாளரிடம் அல்லது, திரு. சண் தயாளன் (யாழ். இந்துக் கல்லூரி) அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(06 - 08 - 1994)

செயலாளர்
**யா. மா. அ. மெ. சங்கம்.**
(சி-10071)

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திரு. சின்னப்பொடி தருமலிங்கம்

(புறோக்கர் தருமு)

மலர்வு: 28 - 03 - 1944
உதிர்வு: 18 - 08 - 1993

திதி:- 08 - 08 - 1994

பண்பின் இலக்கணமாய் பாசத்தின் பதியிடமாய்
என்றும் இதய சுத்தியுடன் எம்மை ஆதரித்த தெய்வமே!
பேச்சொன்றும் பேசாமல் பிள்ளை முகம் பாராமல்
மூச்சடங்கி விட்டனையோ!
சேர்ந்திட்ட துணைவியைப் போற்றியே காத்ததையும் - இறை
தந்திட்ட செல்வங்களைத் தாங்கியே வளர்த்ததையும்
சூழ்ந்திட்ட உறவுகளைத் தூக்கியே விட்டதையும்
மறந்திடவும் முடியுமோ! மண்ணில் நாம் உள்ளவரை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை கண்ணீர்ப் பூக்கள் கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், உற்றார், உறவினர்கள்.

(9037)

---

லெப்.காந்தி (... ளாங்குளம்-மாங்குளம்)
**லெப்.வரன்** (கந்தர் தர்மகுலசிங்கம் - சிவன்கோயிலடி, உருத்திரபுரம்-கிளிநொச்சி)
**டலஸ்** (குழந்தைவேல் ஜெயரட்ணம் - அப்பாள்குளம்-கிளிநொச்சி)
**ஜோதி** (பாலசிங்கம் றூபராசா-சிவன் கோயில்வீதி, உருத்திரபுரம்- கிளிநொச்சி)
**யாக்ஸ்** (பத்மநாதன் ராஜ்குமார் - தட்சணாமருதமடு, மடுக்கோயில்-மன்னார்)
**2-ம் லெப்.யசோ** (பஞ்சலிங்கம் ராஜ்குமார்-ஆதிகோயிலடி-வல்வெட்டித்துறை)
**ஆனந்தன்** (தங்கரத்தினம் ரவிச்சந்திரன்-ஆனந்தன் வீதி, ஆனைக்கோட்டை-யாழ்)
**ஜெனா** (சிறிதங்கராஜா சிறிநவநீதன்-மீசாலை வடக்கு,கொடிகாமம்-யாழ்)
**சங்கர்** (இந்திரலிங்கம் கிரிதரன்-162, கடற்கரைவீதி-பருத்தித்துறை)
**பகீர்** (ஜெயராசா சுனில்-சிறுவிளான் 'இளவாலை-யாழ்)
**பதுமநிதி** (சுதாஜினி சிறிதரன்-வீரயாணிக்கதேவன் துறை-மயிலிட்டி)

1992 -ம் ஆண்டு யாழ் - வளலாயில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.
**லெப். ஆனந்தக்குமார்-சாள்ஸ்** (பாலசுப்பிரமணியம் தெய்வேந்திரன் - சித்தன்கேணி - யாழ்)

மட்டு-3-ம் கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,
**2-ம் லெப். பிருந்தவராஜ்** (சின்னத்தம்பி குகேந்திரன் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

நாட்டுப்பற்றாளரான,
**யோகநாதன் ரூபகுமார்** (பாரதி வீதி, மட்டு)

1993 -ம் ஆண்டு கிளி - ஆனையிறவில்சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,
**2-ம் லெப். நாகராசா** (அழகுவேல் ரவிச்சந்திரன் - 154-ம் கட்டை - கிளிநொச்சி)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா முப்படைகளினாலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10070)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



# கணிதம் O/L

★ வினாத்தாள் பற்றிய நோக்கும்
★ பரீட்சைக்கான வழிகாட்டலும்

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையிலே கணிதபாடமானது ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது. எத்தொழில் துறையை எடுத்தாலும் கணித பாடத்திலே விசேடசித்திக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது. அநேகமான மாணவர்கள் க. பொ. த சாதாரண தரப் பரீட்சையிலே கணித பாடம் தவிர்ந்த ஏனைய பாடங்களிலே நல்ல பேறுகளைப் பெற்றும் கணிதபாடத்திலே சித்தி பெறாமையால் க. பொ. த. உயர்தரம் கற்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுவிடுகின்றனர். பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 27% ஆனோர் மட்டுமே கணிதபாடத்திலே சித்தியடைந்து வருகிறார்கள் என்பதைக் கடந்தகாலப் பரீட்சைப் பெறுபேறுகள் எடுத்தியம்புகின்றன. அதிகமான மாணவர்கள் கணிதபாடத்திலே சித்திபெற முடியாமல் இருப்பதையிட்டு அங்கலாய்க்கின்றனர். இந் நிலைக்கான காரணங்களை ஆராய்வோமாயின் மாணவர்கள் க. பொ. த. சாதாரணதர வினாத்தாள் அமைப்பை நன்கு விளங்கி அதற்கேற்ற முறையினூடு தம்மைத் தயார்படுத்தாமையே காரணமாகலாம். தற்போதைய க. பொ. த. (சா/தர) பரீட்சை வினாத்தாள் அமைப்பானது மாணவர்கள் இலகுவாக சித்தி பெறுவதற்கு அனுகூலமாகவே உள்ளது. பகுதி ii வினாத்தாளிலே 12 வினாக்கள் அடங்கியுள்ளன. இதிலே 5 வினாக்களுக்கு மாணவர்கள் சரியாக விடையளிப்பார்களாயின் பரீட்சையிலே இலகுவாகச் சித்தி பெறலாம். மீத்திறன் மாணவர்களைப் பொறுத்தவரையில் வினாத்தாள் எத்தரத்தினதாயினும் அதை இலகுவாகக் கையாள்வதை அனுபவவாயிலாகக் காணக்கூடியதாக உள்ளது.

மெல்லக்கற்கும் மாணவர்கள் க. பொ. த. சாதாரண தர வினாத்தாளிலே வினாத் தெரிவை தெளிவாக்குவதன் மூலம் சித்தி பெறும் வாய்ப்பினை இலகுவாக்கிக் கொள்ள வேண்டும். இவர்களைக் கருத்திலே கொண்டு முன்னோடிப் பரீட்சைக்குத் தயாராகி இருக்கும் மாணவர்களிற்கு பரீட்சை வினாத்தாள் அமைப்புப் பற்றி சுருக்கமான விளக்கம் ஒன்றை அளிக்கலாம் என எண்ணுகிறேன். மாணவர்கள் கணித பாடத்திலே வினாத்தாள் அமைப்பை விளங்கிக் கொண்டு சிறந்த பெறுபேறுகளை தமதாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே என் அவா.

## பகுதி I வினாத்தாள்

1. க. பொ. த சாதாரண தரப் பரீட்சையிலே பகுதி I இல் 30 வினாக்கள் அடங்கியுள்ளன, இவ் வினாக்களுக்கு 30 சதுரப்பெட்டிகளைக் கொண்ட விசேட விடைத்தாள் வழங்கப்படும். இதற்கு ஒரு மணித்தியாலம் மட்டுமே வழங்கப்படுகின்றது. மாணவர்கள்சராசரியாக 2 நிமிடங்களுக்குள் வினாஒன்றுக்கு விடையளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் வினாக்களுக்கு விடையளிக்கும் போது அவதானமாயும் விரைவாகவும் விடையளிக்கப் பயிற்சி எடுத்தல் வேண்டும். மாணவர்கள் கடினமான வினாக்களுக்கு விடையளிப்பதிலே கூடிய நேரத்தைச் செலவழிப்பார்களாயின் நன்கு தெரிந்த வினாக்களுக்கு விடையளிப்பதற்கு நேரம் போதியதாக அமையாது. எனவே மாணவர்கள் முதலிலே தமக்கு நன்கு தெரிந்த வினாக்களுக்கே விடையளிக்க வேண்டும்.

உதாரணமாக :

8ஆம் வினா ஒரு மாணவனுக்கு உடனடியாக விடையளிக்கக் கூடியதாக இருப்பின் அவர் அவ்

2. பகுதி I வினாக்களிற்கு விடையளிக்கும் போது செய்கைகளை அவ்வக் கூடுகளிலே காட்டுதல் வேண்டும். நீங்கள் கணக்குகளிற்கான படிகளை ஒழுங்காகக் காட்டுவீர்களாயின் படிமுறைக்குரிய புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருக்கும்.

தேவையான படிமுறைகளை மட்டும் காட்டினால் போதுமானதாகும்.

உ-ம் ; ரூபா 800 இற்கு வாங்கிய பொருள் 10% நட்டத்தில் விற்றால் விற்றவிலை என்ன?

$$விற்றவிலை = \frac{90}{100} \times 800 ------ [1]$$
$$= ரூ. 720 ---- [1]$$

மேலுள்ள வினாவிலே இரண்டாவது படிக்கான விடை தவறாக இருப்பினும் முதலாவது படிக்குரிய புள்ளியையாவது பெறக்கூடியதாகஇருக்கும். தேவையான படிமுறைகளை மாத்திரம் காட்டினால் போதுமானது அதிகமான படிகளைக் காட்டி நேரத்தைச் செலவு செய்யவேண்டியதில்லை. சில வினாக்களுக்கு நேரடியாக விடைகள் கிடைக்கலாம்.

உதாரணமாக ;

கேத்திர கணித வினாக்களுக்கு படங்களைக் கொண்டு நேரடியாக விடையளிக்கக் கூடியதாக இருக்கும்

உ+ம் 60° (ஒன்று விட்ட கோணம்)

(3) பகுதி I வினாக்களுக்கு விடையளிக்கும்போது அலகுகள் இடப்பட வேண்டிய இடங்களிலே சரியாக இடப்பட்டுள்ளதா? என நன்கு அவதானிக்க வேண்டும். சில மாணவர்கள் $m^2$ என வரும் விடைக்கு $cm^2$ எனவும் அல்லது அலகுகளே இடாமலும் விடுவது வழமை. ஆகவே அலகுகளை கவனத்திலே கொள்ளுதல் வேண்டும்

உ+ம்:- 7 cm ஆரையுடைய வட்டப் பரப்பு யாது?

$$வட்டப்பரப்பு = \pi r^2$$
$$= \frac{22}{7} \times 7 \times 7$$
$$= 154\ cm^2$$

(4) ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும் போது எழுத்துக்களையும் இலக்கங்களையும் தெளிவாக எழுதுதல் வேண்டும்

★ கடந்தகால பரீட்சை வினாத்தாள்களை நன்கு ஆராய்வோமாயின் பகுதி I இல் தொடர்ந்து ஒரே பகுதிகளிலேயே வினாக்கள் அமைவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆண்டு 8 தொடக்கம் ஆண்டு 11 வரையிலான பாடத்திட்டத்தை உள்ளடக்கியே அதிகமான வினாக்கள் அமைகின்றன. பின்னச்சுருக்கல், அட்சரகணிதப் பின்னம், எளியசமன்பாடு, இலாபநட்ட நூற்றுவீதம், காரணிப்படுத்தல், பல்கோணிகளின் பக்கங்களை காணல், ஒழுக்குகள், ஆகாரம் இடையம் இடை காணல், வேலை காலம் பணம், சமாந்தரக்கோடுகள், எண் அடிகள், எழுவாய் மாற்றம், நேர்கோட்டு வரைபு, தொடைகள், நிகழ்தகவுகள். வட்டம்சம்பந்தமான கேத்திர கணிதம் போன்ற பகுதிகளிலே வினாக்கள் அமைவதை கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்களை அவதானிக்கும் மாணவர்களிற்கு நன்கு விளக்கக் கூடியதாக இருக்கும் இப் பகுதிகளிலே அக்கறை




இவற்றுள் எவையேனும் 10 வினாக்களுக்கு மாணவர்கள் விடையளிக்கப்படும்படி கேட்கப்படுகின்றனர் இதற்காக 3 மணித்தியாலயங்கள்மட்டுமே வழங்கப்படுகின்றன. சராசரியாக ஒரு வினாவிற்கு 18 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட வேண்டியுள்ளது. கடந்தகால பரீட்சை வினாத்தாள்களை நன்கு அவதானிப்போமானால் தொடர்ச்சியாக பின்வரும் வினாக்கள் வருவதை பொதுவாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

வினா (1) (அ) காரணிப்படுத்தல் (ஆ) ஒருங்கமை சமன்பாடு (இ) இருபடிச்சமன்பாடு
வினா (2) (அ) சுட்டி (ஆ) மடக்கை வாய்பாட்டை உபயோகியாது பெறுமதி காணல் (இ) மடக்கை வாய்பாட்டை உபயோகித்து பெறுமதி காணல்.
வினா (3) தொடையும், நிகழ்தகவும்
வினா (4) வளைகோட்டு வரைபு
வினா (5) வட்டம் சம்பந்தமான அமைப்புகள் அல்லது பரப்புச் சம்பந்தமான அமைப்புகள்(சில வேளைகளில் மேலுள்ள இரு அமைப்புக்களையும் கொண்ட ஒரு வினாவும் வரலாம்).
வினா (6) எளிய கூட்டு வட்டிகள் அல்லதுஅன்னிய செலாவணி அல்லது வரி அல்லது பங்குடமை வியாபாரம் அல்லது கடன்கள் அல்லது வாடகைக் கொள்வனவு அல்லது இலாபநட்ட நூற்றுவீதம்.
வினா (7) கேத்திர கணிதம்
வினா (8) புள்ளிவிபர இயல்
வினா (9) வட்டம் சம்பந்தமான கேத்திரகணிதம்
வினா (10) கூட்டல் விருத்தியும் பெருக்கல் விருத்தியும்

ல. சதீஸ்குமார்
ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி.

வினா (11) அளவையியல்
வினா (12) அளவிடைப்படம், திரிகோண கணிதம்

மேலுள்ளபகுதிகளிலே மெல்லக் கற்கும் மாணவர்கள் சில பகுதிகளை அவதானமாக செய்வார்களாயின் அவர்கள் சித்திபெறும் வாய்ப்பை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். மடக்கைகள், வரைபு, புள்ளிவிபரவியல், அமைப்புகள், காரணி சமன்பாடுகள், அளவியல் போன்ற பகுதிகளிலே அதிகமான பயிற்சிகள் எடுப்பார்களாயின் அவர்கள் அதிகமான புள்ளிகளைப் பெறலாம். கடந்த காலப் பரீட்சைகளில் மேலுள்ள பகுதிகளில் வினாக்கள் ஒரே மாதிரியாகவே அமைவதைக்காணலாம் எனவே மெல்லக்கற்கும் மாணவர்களைக் கருத்திலே கொண்டு அவர்களுக்கு சில வினாக்களை புள்ளியிடல் திட்டத்துடன் விளக்கமளிக்கலாம் என எண்ணுகிறேன்.

வினா -1

பகுதி II இலே முதலாவது வினா (அ),(ஆ) (இ) என 3 பகுதிகளைக் கொண்டதாக அமையும். (அ) பகுதியிலே காரணிப்படுத்தல் (ஆ) பகுதியிலே ஒருங்குமை சமன்பாடு (இ) பகுதியில் இருபடிச் சமன்பாடு எனப் பல ஆண்டுகளிலே தொடர்ந்து ஒரே வகையாகவே இவ் வினா அமைகின்றது.

### (அ) காரணிப்படுத்தல்

2] பொருத்தமான உறுப்புக்களைச் சோடியாகச் சேர்த்து பொதுக்காரணி எடுத்தல்

உ+ம்: 1] $2xp + 6yq - 3py - 4xq$
$= 2xp - 4xq + 6yq - 3py$
$= 2x(p - 2q) - 3y(p - 2q)$
$= (p - 2q)(2x - 3y)$

3] நடு உறுப்பைப் பிரித்துக் காரணிப்படுத்தல். (மூவுறுப்புக் காரணி)

உ+ம்; $y^2 - y - 6$
$= y^2 - 3y + 2y - 6$
$= y(y - 3) + 2(y - 3)$
$= (y - 3)(y + 2)$

4] வர்க்க வித்தியாசக் காரணி

உ+ம்: 1] $a^2 - b^2$
$= (a + b)(a - b)$
2] $m^2x^2 - p^2$
$= (mx + p)(mx - p)$

5] கனங்களின் வித்தியாசம்

உ+ம்: 1] $a^3 - b^3$
$= (a - b)(a^2 + ab + b^2)$
2] $x^3 - 27$
$x^3 - 3^3$
$= (x - 3)(x^2 + 3x + 9)$

6] கனங்களின் கூட்டல்

உ+ம்: 1] $a^3 + b^3$
$= (a + b)(a^2 - ab + b^2)$
2] $8x^3 + 125$
$= (2x)^3 + 5^3$
$= (2x + 5)(4x^2 - 10x + 25)$

7] நிறைவர்க்கமாக்குவதன் மூலம் காரணிப்படுத்தல்

உ+ம்; 1] $x^2 - y^2 + 2x + 1$
$= (x^2 + 2x + 1) - y^2$
$= (x + 1)^2 - y^2$
$= (x + 1 + y)(x + 1 - y)$
2] $x^4 + x^2y^2 + y^4$
$= x^4 + 2x^2y^2 + y^4 - x^2y^2$
$= (x^2 + y^2)^2 - (xy)^2$
$= (x^2 + y^2 + xy)(x^2 + y^2 - xy)$
3] $x^2 + \frac{1}{4x^2}$
$= (x + \frac{1}{2x})^2 - 1$
$= (x + \frac{1}{2x} + 1)(x + \frac{1}{2x} - 1)$

குறிப்பு:

காரணிப்படுத்தல் வினாவிற்கு விடையளிக்கும்போது முதலிலே நேரடியாகப் பொதுக் காரணி உள்ளதா என அவதானித்து நேரடியான பொதுக் காரணியை எடுத்தல் வேண்டும். பின் அத்துடன் நிறுத்திவிடாது தொடர்ந்து காரணிப்படுத்தக் கூடியதாக இருக்கின்றதா? என அவதானிக்க வேண்டும் அதாவது முழுமையான ஒரு காரணிப்படுத்தப்பட்ட வகையிலே உங்கள் விடைகள் அமையவேண்டும்.

உ+ம்: $8x^2 - 50$
$2[4x^2 - 25]$
$2[(2x)^2 - 5^2]$
$2[(2x + 5)(2x - 5)]$

### (ஆ) ஒருங்கமை சமன்பாடுகள்

கடந்தகால பரீட்சைவினாக்களை அவதானிக்கும் போது (i) இரு தெரியாக் கணியங்களைக் கொண்ட ஒருங்கமை சமன்பாடுகள் (ii) ஒருங்கமை சமன்பாட்டின் உத்திக் கணக்குகள் (iii) மூன்று தெரியாக் கணியங்களைக் கொண்ட ஒருங்கமை சமன்பாடுகள் என வினாக்கள் வந்திருப்பதை அவதானிக்கலாம். இவ் வினாவுக்கு விடையளிக்கும் போது சில விடயங்களை அவதானிப்பின் விரைவாக விடையளிக்கக் கூடியதாக இருக்கும்.

(1) ஏதாவது தெரியாக்கணியங்களில் ஒன்றை நேரடியாக நீக்கக் கூடியதாக இருக்கின்றதா? என அவதானித்து அவ்வாறு செய்ய முடியாதவிடத்தில் தெரியாக் கணியங்களின் குணகங்களைச் சமன்படுத்துவதன் மூலம் அதனை அகற்றி சமன்பாட்டைத் தீர்க்

உதாரணமாக :

8ஆம் வினா ஒரு மாணவனுக்கு உடனடியாக விடையளிக்கக் கூடியதாக இருப்பின் அவர் அவ் வினாவை முதலிலே எடுத்துச் செய்தல் வேண்டும். 8ஆம் வினாவிற்கு 8-வது கூட்டினுள்ளே விடையளித்தல் வேண்டும். இவ்விதம் நன்கு தெரிந்த வினாக்களுக்கு முதலிலே விடையளிக்கும் போது கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் அதிகமான வினாக்களுக்கு விடையளிக்கலாம்.

கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்களை அவதானிக்கும் மாணவர்களிற்கு நன்கு விளக்கக் கூடியதாக இருக்கும் இப் பகுதிகளிலே அக்கறை கொண்டு பயிற்சிகள் எடுத்தால் பகுதி I இல் அதிகமான வினாக்களுக்கு விடையளிக்கக் கூடியதாக அமையலாம்.

### பகுதி II வினாத்தாள்

க. பொ. த. (சா/தர) பரீட்சையிலே பகுதி II வினாத்தாளிலே 12 வினாக்கள் அடங்கியுள்ளன.

### (அ) காரணிப்படுத்தல்

இவ் வினாவுக்கு விடையளிக்கும்போது வினா எவ்வகைக்குள் காரணிப்படுத்தக்கூடியதாக அமைகின்றது என நன்கு அவதானித்து விடையளிக்க வேண்டும்.

1] நேரடியாக பொதுக் காரணி எடுத்தல்

உ+ம்: 1] $3a(2x - y) - 5b(2x - y)$
$= (2x - y)(3a - 5b)$

தெரியாக் கணியங்களின் குணகங்களைச் சமன்படுத்துவதன் மூலம் அதனை அகற்றி சமன்பாட்டைத் தீர்க்கலாம்.

(2) அடுத்ததாக சமன்பாட்டை அவதானித்து சமன்பாடுகளைக் கூட்டும் போதா அல்லது கழிக்கும் போதா சமன்பாட்டினுள்ள தெரியாக் கணியங்களில் ஒன்றை நீக்கலாம். என தெரிந்திருக்க வேண்டும். இதை சுலபமாக நினைவிலே வைத்திருக்கலாம். சமப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரலாறும் சமூகக்கல்வியும் O/L

## அமெரிக்க சுதந்திரப் போராட்டம் (1775-1783)

க. கோபி

அமெரிக்க சுதந்திரப் போராட்டமானது உலக நாடுகளின் பல்வேறு வகையான போராட்டங்களுள் ஒரு சிறப்பு வாய்ந்ததாக அமைந்து காணப்படுகின்றது. உலக நாடுகளின் பல்வேறு போராட்டங்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகின்றது. அமெரிக்க மக்களின் உள்ளங்களில் புகைந்து கொண்டிருந்த சுதந்திர நெருப்பானது மூன்றாம் ஜோர்ஜின் பிடிவாதத்தாலும் ஆதிக்க மனப்பான்மையாலும் நன்கு கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. இது ஒரு போராக வடிவெடுத்து அப் போரில் ஆங்கில நாடு அடைந்த தோல்வியானது பிரித்தானியா இதுவரை கடைப்பிடித்து வந்த பழைய குடியேற்றநாட்டுக் கொள்கையின் தோல்வியைச் சுட்டிக் காட்டுகின்றது. இப்போரில்அமெரிக்காபெற்ற வெற்றியானது ஜனநாயகக் கொள்கைக்கு கிடைத்தவெற்றியாக அமைகின்றது.

அடுத்து அமெரிக்க சுதந்திரப் போராட்டம் பற்றியும் அது தோற்றம் பெற்றமைக்கான காரணங்களையும் அதனால் உண்டான விளைவுகள் பற்றியும் ஆராய்வோம். முதலில் இப்போராட்டம் பற்றிச் சுருக்கமாக ஆராய்வோம். 18 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் வியாபார நோக்கம் கொண்டு வருகை தந்த ஆங்கிலேயர்களால் வட அமெரிக்காவின்கிழக்குக் கரையோரத்தில் 13 குடியேற்றங்கள் நிறுவப்பட்டு காணப்பட்டன. அவை நியூஹம்சயர், மசூசெட்ஸ். றோட் ஐலண்ட், கனெக்டிகட் நியூயோக், நியூயேசி, பென்சில் வேனியா, டெலவெயார், மேறிலண்ட், வேஜினியா, வடகறோலினா, தென்கறோலினா ஜோஜியா போன்றனவே அவையாகும். எனவே இக் குடியேற்றங்கள் அனைத்தும் தமது தாய் நாட்டுக்கெதிராக சுதந்திரம் வேண்டி நடத்திய போராட்டமே அமெரிக்க சுதந்திரப் போராட்டமாகும். சுதந்திரத்தின் பின்னர் குடியேற்ற வாசிகளால் வகுக்கப்பட்ட யாப்புக் காரணமாக இப் போராட்டம் உலக வரலாற்றில் உன்னதமான இடத்தைப் பிடித்திருக்கின்றது.

பிரித்தானியர் அங்கு சென்றபோது அங்கு வாழ்ந்த மக்கள் செவ்இந்தியர் எனப்பட்டனர். இவர்களை துரத்திவிட்டு பிரித்தானியர் அமெரிக்காவின் பகுதிகளை கைப்பற்றிக் கொண்டனர். பிரித்தானியர் அக்காலப் பேரரசுவாதக் கொள்கையின் படி தமது குடியேற்றங்களை தமது சொத்துக்களாகவே கருதிக் கொண்டனர். இவர்கள் இந் நாட்டிலிருந்து தமக்குத் தேவையான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளவும், முடிவுப் பொருட்களை விற்பனை செய்கின்ற சந்தைகளாகவும் மாற்றுவதற்கு முற்பட்டனர்.

பிரித்தானியர் தமது குடியேற்றங்களை விரிவுபடுத்துகின்ற போது அதனை எதிர்த்த சுதேசிகளை முறியடித்தனர். இவர்களால் ஏழுஆண்டுப் போரின் பின் (1756-1763) பிரான்சியர் தோற்கடிக்கப்பட்டமையும் சிறிய காலத்தினுள் செவ் இந்தியர்கள் தோற்கடிக்கப்பட்டமையும் குடியேற்ற மக்களுக்கு சிறிது ஆறுதல் தந்தது. எனவே பிரான்சியரிடம் போர் செய்த செலவினை பெறும் பொருட்டு இரு நடவடிக்கைகளை பிரித்தானிய அரசு கையாண்டது. அவை கப்பல் ஓட்டச் சட்டம், மற்றையது புதிய வரிகள் விதிக்கப்பட்டமையாகும். புதிய வரிகள் விதிக்கப்பட்டமையை குடியேற்ற மக்கள் கண்டித்தனர். இவர்கள் தமக்கு பிரதிநிதித்துவம் இல்லாத பிரித்தானிய பாராளுமன்றத்தால் வரி எப்படி விதிக்க முடியும் என வாதிட்டனர். இவ்வாறான எதிர்பார்ப்புக்களால் முத்திரை வரிகள் நீக்கப்பட்ட போதும் கூட அமெரிக்க குடியேற்ற வாசிகளால் இறக்குமதி செய்யப்பட்ட கடதாசி கண்ணாடி தேயிலை ஆகியவற்றின் மீது வரிகள் விதிக்கப்பட்டன. தொடர்ந்து உண்டான கிளர்ச்சிகளின் விளைவாக தேயிலை வரிகள் தவிர்ந்த ஏனைய வரிகள் நீக்கப்பட்டன.

இவ்வாறான ஒரு எதிர்பார்ப்பு உள்ளபோது 1773-ல் அது ஓர் உச்சக் கட்டத்தை அடைந்தது பொஸ்டன் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலுக்குள் திடீரெனப் புகுந்த குடியேற்ற வாசிகள் கப்பலில் இருந்த தேயிலைப் பெட்டிகளை கடலிலே எறிந்து பொஸ்டன் தேநீர் விருந்து என ஆரவாரம் செய்தனர். இது பொஸ்டன் கலகம் எனப்படுகின்றது. இதனால் ஆத்திரம் அடைந்த பிரித்தானிய அரசு பொஸ்டன் துறைமுகத்தினை மூடியதுடன் குடியேற்ற வாசிகள் நட்டஈடு தரவே வேண்டும் எனவும் அவர்கள் பகிரங்கக் கூட்டம் கூடுவதற்குத் தடையும் விதித்தது ஆத்திரமடைந்த குடியேற்ற வாசிகள் பிரித்தானியப் பொருள்களைப் பகிஷ்கரிக்க முடிவு செய்தனர். ஜோர்ச்வொஷிங்டன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு பிரித்தானிய அரசுக்கு எதிராக போராட முடிவானது. இந்நிலையில் இருசாராருக்கும் இடையில் நடைபெற்ற போரில் அமெரிக்கர்கள் வெற்றியடைந்தனர். பின் 13 குடியேற்றங்களையும் சேர்ந்த தலைவர்கள் 1766 யூலை 4இல் அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டு அமெரிக்காவை ஒரு சுதந்திர நாடாக பிரகடனம் செய்தனர். இப்பிரகடனம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றது. 1783இல் பிரான்சில் பிரித்தானியருக்கும் அமெரிக்கர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு உதயமானது. பின் 1787இல் பிலடெல்பியாவில் வரையப்பட்ட அமெரிக்க யாப்பே உலகத்தின் முதலாவது எழுத்துருப் பெற்ற யாப்பாக அமைகின்றது.

அடுத்து அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் தோன்றியமைக்கான காரணங்களை ஆராய்வோம்.

1. பிரான்சியருடன் நடந்த போரில் உண்டான தாக்கங்கள் இப்போரில் பிரித்தானியக் குடியேற்றங்களுக்கு அச்சுறுத்தலாக இருந்த பிரான்சியர் தோற்கடிக்கப்பட்டனர். தெற்கில் இருந்த ஸ்பானியரும் விலகிச் சென்றனர். எனவே பிரித்தானியரின் உதவி அமெரிக்கர்களுக்கு தேவையற்றதாகியது. இப் போரில் அமெரிக்காவின் பல மாகாணங்களைச் சேர்ந்த மக்களும் ஒன்று திரண்டு போராடியமையால் ஒற்றுமை மனப்பான்மை உண்டானமை அமெரிக்கர் பல நல்ல இராணுவப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர். ஏழு ஆண்டுப் போரில் உண்டான செலவை ஈடு செய்யுமுகமாக அமெரிக்கர் மீது வரிகள்விதிக்கப்பட்ட போது கலகம்உண்டானது 2, பழைய குடியேற்ற நாட்டுக்கொள்கையில்காணப்பட்ட குறைபாடுகள்

அக்காலத்தில் குடியேற்றங்கள் தாய் நாட்டின் நன்மைக்கு இருக்கின்றன என்ற கருத்து மேலோங்கி காணப்பட்டது எனவே பிரித்தானியருக்குச் சார்பாகவே குடியேற்ற நாட்டு வியாபாரம் இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. புகையிலை, பருத்தி என்பன பிரித்தானிய அரசுக்கு மட்டுமே அனுப்பவேண்டும் எனவும் இரும்பு கம்பளி போன்ற பொருட்களை விற்பனை செய்யும் அதிகாரம் அமெரிக்கருக்கு இல்லை எனவும் கூறப்பட்டது. பிரித்தானியர் இங்கிருந்து மூலப் பொருட்களைப் பெற்று அதனை முடிவுப் பொருட்களாக மாற்றி விற்பனைசெய்கின்ற சந்தையாக வைத்திருந்தனர் மேலும் 1651, 1660 காலங்களில் உண்டான கப்பல் சட்டங்கள் ஆங்கில கப்பல்கள் தவிர பிற நாட்டுக் கப்பல்களில் அமெரிக்கர்கள் தமது பொருட்களை அனுப்ப முடியாது செய்தது, மேலும் ஐரோப்பாவிலிருந்துபொருட்கள் வரவேண்டும் ஆனாலும் அது இங்கிலாந்தின் ஊடாகவே வரவேண்டும் என்ற நிலைமைகளும்காணப்பட்டது இவ்வாறான சூழ்நிலை போராட்ட உணர்வை உண்டாக்கியது.

3. அரசியல் அமைப்பிலே காணப்பட்ட சில குறைபாடுகள்

அமெரிக்கர் பேரரசின் அமைப்பு முறையினை மாற்ற எண்ணினர். தாய் நாடும் குடியேற்ற நாடுகளும் கூட்டரசு அரசியல் அமைப்பில் கலந்து வாழ வேண்டுமென அவர்கள் விரும்பினர். ஆங்கிலேயர் ஆங்கிலப் பாராளுமன்றமே இறைமை வாய்ந்ததெனவும் குடியேற்ற நாடுகள் அதன் ஆதிக்கத்திற்கு உட்பட்டன எனவும் வாதாடினர். மன்னன் குடியேற்ற நாடுகளில் அதிக அதிகாரங்களைக் கொண்டு காணப்பட்டான். அமெரிக்க குடியேற்றங்கள் கவர்ணரால் ஆளப்பட்டது. இவரின் அதிகாரத்தை பொது மக்கள் சபையொன்று கட்டுப்படுத்தி வந்தது. இதனால் இவை இரண்டுக்கும் இடையில் அடிக்கடி பிரச்சினைகள் காணப்பட்டு வந்தன. இதனால் மக்கள் தங்கள் அதிகாரம் அதிகரிக்க வேண்டுமெனவும் ஆங்கில ஆட்சி ஒழிக்கப்படவேண்டுமெனவும் கோஷமிட்டனர்.

4) பொருளாதார குறைபாடுகள் சில காணப்பட்டமை.

1735-ல் உண்டான வெல்லப்பாகுச் சட்டம், 1764-ல் உண்டான இனிப்புச் சட்டம் போன்றன குடியேற்ற நாட்டு மக்களினை பாதிப்படையச் செய்தது. 1764-ல் ஐரோப்பாவுக்கு அனுப்பப்படுகின்ற பொருட்களுக்கு வரி உயர்த்தப்பட்டது. வர்த்தகம் பிரித்தானியருடைய கைகளில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கணிதம்

பட்ட தெரியாக் கணியங்களுக்கு முன்னால் ஒரே அடையாளம் காணப்பட்டால் (+,+) (−,−) சமன்பாட்டை கழிக்கும் போதே அத்தெரியாக் கணியம் நீங்கும். சமப்பட்ட தெரியாக் கணியங்களுக்கு முன்னால் வித்தியாசமான அடையாளம் இருப்பின் (+,−) சமன்பாட்டைக் கூட்டியே தெரியாக் கணியத்தை நீக்க வேண்டும்.

உ+ம்; 1. இரு தெரியாக்கணியங்களைக் கொண்ட ஒருங்கமை சமன்பாடுகள்

1)
$$3x + y = 7 \quad \text{--- (1)}$$
$$-2x + y = (-3) \quad \text{--- (2)}$$

$(1)-(2) \Rightarrow 5x = 10$

$x = 2$

$x = 2$ ஐ சமன்பாடு (1) இல் பிரதியிட

$3x + y = 7$

$3 \times 2 + y = 7$

$y = 7 - 6$

$y = 1$

∴ $x = 2,\ y = 1$

2)
$$x - y = 3 \quad \text{--- (1)}$$
$$\frac{x}{5} - \frac{y}{7} = \frac{27}{35} \quad \text{--- (2)}$$

$(2) \Rightarrow 7x - 5y = 27 \quad \text{--- (3)}$

$(1) \times 5 \Rightarrow 5x - 5y = 15 \quad \text{--- (4)}$

$(3)\ \ (4) \Rightarrow 2x = 12$

$x = 6$

$x = 6$ ஐ சமன்பாடு (1) இல் பிரதியிட

$x - y = 3$

$6 - y = 3$

$-y = 3 - 6$

$y = 3$

∴ $x = 6,\ y = 3$

உ+ம் 2: மூன்று தெரியாக்கணியங்களைக் கொண்ட ஒருங்கமை சமன்பாடுகள்

மூன்று தெரியாக்கணியங்களைக் கொண்ட ஒருங்கமை சமன்பாடுகள் தரப்படுமிடத்தில் சமன்பாட்டை அவதானித்து ஏதாவது ஒரு தெரியாக் கணியத்தை நீக்கி இரு தெரியாக்கணியங்களைக் கொண்ட இரண்டு சமன்பாடுகளை அமைத்து வழமையான முறைகளில் தீர்த்து இரு கணியங்களைக் கண்டு பிரதியிடுவதன் மூலம் மூன்றாவது தெரியாக் கணியத்தைக் காணலாம்.

$$2x + y + z = 8 \quad \text{--- (1)}$$
$$5x - 3y + 2z = 3 \quad \text{--- (2)}$$
$$7x + y + 3z = 20 \quad \text{--- (3)}$$

$(1) \times 3 \Rightarrow 6x + 3y + 3z = 24 \quad \text{--- (4)}$

$(1)-(3) \Rightarrow -5x - 2z = -12 \quad \text{--- (5)}$

$(2)+(4) \Rightarrow 11x + 5z = 27 \quad \text{--- (6)}$

$(5) \times 5 \Rightarrow -25x - 10z = -60 \quad \text{--- (7)}$

$(6) \times 2 \Rightarrow 22x + 10z = 54 \quad \text{--- (8)}$

$(7)+(8) \Rightarrow -3x = -6$

$x = 2$

$x = 2$ஐ சமன்பாடு (5) இல் பிரதியிட

$-5x - 2z = -12$

$-5 \times 2 - 2z = -12$

$-2z = -12 + 10$

$z = 1$

$x = 2,\ z = 1$ ஐ சமன்பாடு (1) இல் பிரதியிட

$2x + y + z = 8$

$2 \times 2 + y + 1 = 8$

$y = 8 - 5$

$y = 3$

∴ $x = 2,\ y = 3,\ z = 1$

உ+ம்:

ஒருங்கமை சமன்பாட்டின் உத்திக் கணக்குகள்

வினா (1) 3 வருடங்களிற்கு முன் ஒரு தகப்பன் மகனிலும் 8 மடங்கு வயதுடையான். இன்னும் இரு வருடங்களின் பின் தகப்பன் மகன் வயதிலும் $4\frac{1}{2}$ மடங்காகும். அவர்களின் தற்போதைய வயது என்ன ?

(a) மகனின் தற்போதைய வயதை x எனவும் தகப்பனின் தற்போதைய வயதை y எனவும் கொண்டு x y இலான இரு சமன்பாடுகளை அமைக்க

(b) இச் சமன்பாடுகளைத் தீர்ப்பதன் மூலம் தகப்பனினதும் மகனினதும் தற்போதைய வயதுகளைக் காண்க

விடை;- மகனின் தற்போதைய வயது = x ஆண்டுகள்

தகப்பனின் தற்போதைய வயது = Y ஆண்டுகள்

$8(x - 3) = y - 3$

$8x - y = 21 \quad \text{--- (1)}$

$\frac{9}{2}(x + 2) = y + 2$

$9x - 2y = -14 \quad \text{--- (2)}$

$(1) \times 2 \Rightarrow 16x - 2y = 42 \quad \text{--- (3)}$

$(2)-(3) \Rightarrow -7x = -56$

$x = 8$

$x = 8$ஐ சமன்பாடு (1) இல் பிரதியிட

$8x - y = 21$

$8 \times 8 - y = 21$

$-y = -43$

$y = 43$

∴ மகனின் தற்போதைய வயது = 8 ஆண்டுகள்

தகப்பனின் தற்போதைய வயது = 43 ஆண்டுகள்

## இ) இருபடிச் சமன்பாடு

நிறைவர்க்கமாக்குவதன் மூலம் தீர்க்கும்படி இருபடிச் சமன்பாட்டுக் கணக்கு ஒன்று வருவதை அவதானிக்கலாம். சில வேளைகளில் இருபடிச் சமன்பாட்டைக் கொண்ட உத்திக் கணக்கும் வரலாம்.

உ+ம் ;(1) $x^2 + 8x - 8 = 0$ எனும் சமன்பாட்டைத் திருத்தி விடையை இரண்டாம் தசமதானத்திற்கு திருத்தமாகத் தருக.

$x^2 + 8x - 8 = 0$

$x^2 + 8x = 8$

$x^2 + 8x + 4^2 = 8 + 16$

$(x + 4)^2\ 24$

$x + 4 = \pm\sqrt{24}$

$x + 4 = \pm 4.899$

$x = \pm 4.899 - 4$

$= 0.899$ அல்லது $-8.999$

$= 0,90$ அல்லது $-8.90$

உ+ம் 2 :- இரு எண்களின் கூட்டுத்தொகை $2^1$ ஆகும். அவற்றில் வர்க்கங்களின் கூட்டுத்தொகை 221 ஆகும்.

i) ஒரு எண்ணை x எனக் கொண்டு x இலான ஒரு இருபடிச்சமன்பாட்டைப் பெறுக.

ii) இச் சமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் அவ் இரு எண்களையும் காண்க.

ஒரு எண் = x என்க

மற்றைய எண் = 21 − x

$x^2 + (21 - x)^2 = 221$

$x^2 + 441 - 42x + x^2 = 221$

$2x^2 - 42x + 220 = 0$

$x^2 - 21x + 1.0 = 0$

$(x - 10)\ (x\ 11) = 0$

$x = 10$ அல்லது $x = 11$

∴ ஒரு எண் 10 அல்லது ஒரு எண் 11

மற்றைய எண் 11 மற்றைய எண் 10

குறிப்பு;- பகுதி ii இல் ஒவ்வொரு பகுதிக்கும் 14 புள்ளிகள் வழங்கப்படுகின்றன. வினா i இல்

(அ) பகுதி காரணிப்படுத்தல் = 2 புள்ளிகள்

(ஆ) பகுதி ஒருங்கமை சமன்பாடுகள் = 5 புள்ளிகள்

(இ) பகுதி இருபடிச் சமன்பாடு = 7 புள்ளிகள்

வழங்கப்படுகின்றது.

(தொடரும்)

# வரலாறும் சமூகக்கல்வியும்

காணப்பட்டது. இவர்கள் அமெரிக்காவின் பொருட்களை குறைந்த விலை கொடுத்து வாங்கினர். தமது பொருட்களை கூடிய விலைக்கு விற்பனை செய்தனர். மேற்கில் இருந்த நிலவியாபாரிகளும் பாதிப்படைந்தனர். ஏனெனில் பிரித்தானிய அரசு அபலச்சியன் மலைச் சிகரங்கட்கு அப்பால் யாரும் வரக்கூடாது எனத் தடை செய்தது.

5) சமயரீதியாக ஆங்கிலத் திருச்சபைக் கட்டுப்பாடுகளை மக்கள் வெறுத்தனர், அரச மதமொன்றுக்கு வரிகள் கட்டுவதனை குடியேற்ற நாடுகள் வெறுத்தமை.

6) அமெரிக்கா குடியேற்றங்களைப் பாதுகாக்கும் பொருட்டு 10,000 பேர் கொண்ட ஒரு படையினை அமெரிக்காவில் வைத்திருக்கவும் அதற்கு 360,000 பவுண் வரியாக அமெரிக்க மக்களிடம் இருந்து அறவிடவும் தீர்மானிக்கப்பட்டது. இதனால் 1765-ல் முத்திரை காகிதச் சட்டமானது கொண்டுவரப்பட்டது. இதனை மக்கள் வெறுத்தனர். இவர்கள் பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை என வாதாடினர்.

7) அமெரிக்கர்கள் சட்டம் தெரிந்தவர்கள் இவர்கள் பிரித்தானியரின் செயற்பாடுகளை மேற்படி கண்டித்தார்கள். இவர்கள் ஒன்றரை நூற்றாண்டுகளாக சமத்துவம் என்னும் சூழ்நிலையில் வாழ்ந்து பழகிக் கொண்டவர்கள். மக்கள் ஜனநாயகக் கருத்துக்களை ஆதரித்தனர். பெஞ்சமின் பிராங்கிளின், தோமஸ் ஜெபேசன் போன்ற அறிஞர்கள் தங்கள் எழுத்தாற்றலை பயன்படுத்தி பல நூல்களை எழுதி மக்களை சிந்திக்க வைத்தனர்.

அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தில் ஆங்கிலேயர் தோல்வி அடைய பின்வருவன காரணங்களாக அமைந்தன;

1. பிரித்தானியா அமெரிக்காவிலிருந்து வெகு தொலைவில் காணப்பட்டமையினால் உதவிப்படையை அனுப்புவது கடினமாக இருந்தமை.

2. இவர்கள் ஒரு பரந்த பிரதேசத்தில் சண்டை இட வேண்டி நேரிட்டமையினால் ஒரு இடத்தில் வெற்றி பெற்றால் மறு இடத்தில் தோல்வியைத் தழுவ வேண்டி இருந்தமை.

3. பிரஞ்சுக்காரர், ஸ்பெயின் நாட்டவர்களின் உதவிகள் அமெரிக்கருக்கு கிடைத்தமை.

4. சிறந்த படைத்தலைவர்களை இவர்கள் கொண்டிருந்தமையினால் பொறுமையுடனும் நிதானத்துடனும் போரிட முடிந்தது.

அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தினால் பின்வரும் விளைவுகள் ஏற்பட்டன;

1. அமெரிக்காவில் ஜனநாயகம் வளர்ச்சி அடைவதற்கு வழிவகுத்தது அதாவது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலிய கொள்கைகள் உலகம் எங்கும் பரவின.

2. அமெரிக்க சுதந்திரப் போராட்டமே பிரான்சு, அயர்லாந்து போன்ற நாடுகளில் புரட்சி ஏற்பட வழிவகுத்தது.

3 உலகிலேயே முதன் முதலாக எழுத்துருப் பெற்ற யாப்பினை உருவாக்கியது.

4. பிரித்தானியரின் குடியேற்ற நாட்டுக் கொள்கையில் பாரிய மாறுதல்கள் உண்டாகின.

ஏல விற்பனை

வெற்றுப் பலகைப் பெட்டிகள்

எமது திணைக்களத்தில் வெற்றுப் பலகைப் பெட்டிகள் 11-08-1994-ம் திகதி காலை 10.00 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். விரும்புவோர் அன்றைய தினம் காலை 10 00 மணிக்கு கல்வித்திணைக்கள களஞ்சியக் கிளையில் சமுகம் கொடுக்கவும். ஏலத்தில் வெற்றி கொள்வோர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி, அன்றைய தினமே வெற்றுப் பெட்டிகள் அனைத்தையும் அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.

யாழ். கல்விப்பணிப்பாளர்

(சி-10060)

## வரலாறு O/L

# நவீனசிந்தனையாளர்கள்

**1)நிகலஸ்கொபர்நிகஸ் - கி. பி. 1473 - 1543**

தற்கால வானியற் கலையின் தந்தை என்று கருதப்படும் நிகலஸ்கொபர்நிகஸ் போலந்திலுள்ள டொருன்...ஸின் செல்வாக்கைப் பெருமளவிற்குக் காணலாம். இவர் ஒஸ்திரியாவிலுள்ள கிராப் சர்வகலாசாலையில் வானியலும் கணிதமும் பயிற்றுவிக்கும் ஆசிரியராகக்கடமை ஆற்றினார். அங்கு பணிபுரியும்...

...ஏற்றுக்கொள்ள விரும்பாத கலிலியோ கலிலி இளைஞனானதும் அத்தகைய கோட்பாடுகளை ஆழமாகப் பரிசீலனை செய்த பின்னர் முடிவுகளுக்கு வருதலையே வழக்கமாகக் கொண்டார்.

சமநிறை அற்ற இரு பொருட்களை உயரமானதோர் இடத்திலிருந்து ஒரே சமயத்தில் கீழே விழும்படி எறியின்...

...மிலான் நகரில் ஏறக்குறைய 15 ஆண்டுகள் வாழ்ந்த அவ திறமை மிக்க பொறியியல் அறிஞர் என்ற வகையிலும் பெரும் கீர்த்தி பெற்றார். இவர் ஓவியக் கலையிலும் வானியலிலும், தாவரவியலிலும், விலங்கியலிலும் உடல் உறுப்புகளைப் பிளந்து ஆய்வு செய்வதிலும் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார். கோட்பாடுகள் பற்றிய சிந்தனைகளிலும் இவர் ஈடுபட்டிருந்தார்.

டாவின்சி வரைந்த ஓவியங்கள் உலகின் சிறந்த கலையாக்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவரது ஓவியங்களுள் மோனாவிஸா, வேர்ஜின் ஒஃப் தரொக்ஸ் என்றழைக்கப்படும் இரு ஓவியங்களும் பெரும் புழுகக்குப்...

இதோ!

"ஒரு பவுண்" பெறுமதியான

தங்கப் பதக்கம்

பரிசு

நல்லூர்த் திருவிழாவில் நடைபெறவுள்ள

தமிழீழத்தினை

தெரிந்து கொள்ளுங்கள்

## 1)நிகலஸ்கொபர்நிகஸ் - கி. பி. 1473 - 1543

தற்கால வானியற் கலையின் தந்தை என்று கருதப்படும் நிகலஸ்கொபர்நிகஸ் போலந்திலுள்ள டொருன் என்ற நகரத்தில் கி.பி. 1473 ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு வியாபாரி. இவர் சிறுபராயம் முதல் செல்வம் மிக்க கத்தோலிக்க பிஷப்பாக இருந்த தமது மாமனார் வீட்டில் வளர்ந்தார். மாமனார் இவரை கணிதப்படிப்பிற்காக போலந்திலுள்ள காகோட் சர்வகலாசாலைக்கு அனுப்பினார். 1497 ஆம் ஆண்டில் தமது 25 வயதில் ப்ரொன்பேர்த் தேவாலயத்தில் குருவாக அமர்த்தப்பட்டார்.

தமது கல்வியறிவை மேலும் விருத்தி செய்து கொள்ளும் வண்ணம் இத்தாலி சென்று பொலொன்னாவில் சட்டக் கல்வியையும்படுவாவில் வைத்தியக் கல்வியையும் பயின்று கி. பி. 1500 ஆம் ஆண்டில் ரோமாபுரிப் பல்கலைக்கழகத்தில் கணித விரிவுரையாளராக அமர்ந்தார். 1507 இல் தாயகம் திரும்பிய இவர் தமது மாமனாரின் தனிப்பட்ட வைத்தியராகக் கடமையாற்றினார். இவர் நேரம் கிடைக்கும் வேளைகளில் வானில் மின்னும் தாரகைகள் பற்றிக் கற்பதில். ஈடுபட்டார் இக்கல்வியின் பயனாக புவி தன் அச்சில் சுழல்கின்றதென்பதையும் புவியும் ஏனைய கோள்களும் சூரியனைச்சுற்றி வருகின்றன என்பதையும் அறிந்து கொண்டார். இப் புதிய கருத்து அக்காலத்தில் நிலவியகருத்திற்கு முற்றிலும் மாறுபட்டதொன்றாக விளங்கியது.

## 2) ஜொஹன்ஸ் கெப்லர்- கி.பி. 1571-1630

ஜேர்மனியிலுள்ள வொர்டன்பர்க் மாகாணத்தில் கெப்லர் கி.பி. 1571-ம் ஆண்டில் பிறந்தார் இவர் டுபின்ஜன் சர்வகலாசாலையில் சேர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார் கெப்லரின் விஞ்ஞானக் கொள்கைகளில் கொபர்நிகஸின் செல்வாக்கைப் பெருமளவிற்குக் காணலாம். இவர் ஒஸ்திரியாவிலுள்ள கிராப் சர்வகலாசாலையில் வானியலும் கணிதமும் பயிற்றுவிக்கும் ஆசிரியராகக்கடமை ஆற்றினார். அங்கு பணிபுரியும் காலத்தில் ஐரோப்பாவின் பிரபல வானியல் ஆராய்ச்சியாளர்களான கலிலியோ, டைகோபிரா ஆகியோருடன் கடிதத் தொடர்பு கொண்டார். டைகோபிராவின் மரணத்திற்குப் பின்னர் கெப்லர் பொஹிமியாவின் மன்னனாகிய இரண்டாம் ருடொல்ஃபின் அரச சோதிடராகவும் வானியல் சாஸ்திர நிபுணராகவும் கடமையாற்றினார். அரச குடும்பக் குழந்தைகளின் சாதகங்களைக் கணித்தலே இவரது பிரதான கடமையாகியது.

இக்காலப்பகுதியில் ஞாயிற்றுத் தொகுதியின் கேந்திரஸ்தானம் சூரியன் என்றும் புவி தனது அச்சில் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருவது போல ஏனைய கிரகங்களும் சூரியனைச் சுற்றி வலம்வருகின்றன என்றும் நம்பப்பட்டன. இவை செல்லும் பாதை வட்டமானதல்ல என்றும் நீள் வட்டமானது என்று முதன் முதலில் கூறியவர் கெப்லரே ஆவர். இக் கண்டுபிடிப்பு விஞ்ஞானத் துறை அறிவில் பெரும் புரட்சியை ஏற்படுத்துவதற்கு காரணமாகியது.

## 3) கலிலியோ கலிலி - கி. பி. 1565 - 1644

இத்தாலியிலுள்ள ஃப்லொரன்ஸ் நகரத்தில் கலிலியோ கலிலி 1565 இல் பிறந்தார். உயர் குடியைச் சேர்ந்த இவரது தந்தை திறமை மிக்க இசைக் கலைஞர் என்ற முறையிலும் கணித மேதை என்ற முறையிலும் பிரபல்யம் பெற்றிருந்தார். இவர் விஞ்ஞானத்துறையிலேயே பற்றுக் கொண்டார். எனவே வைத்தியத் துறையிலும் பயிற்சி பெறுவதற்காகப் பீஸா என்ற சர்வகலாசாலைக்குச் சென்றார். அக்காலத்தில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளை அப்படியே

களை ஆழமாகப் பரிசீலனை செய்த பின்னர் முடிவுகளுக்கு வருதலையே வழக்கமாகக் கொண்டார்.

சமநிறை அற்ற இரு பொருட்களை உயரமானதோர் இடத்திலிருந்து ஒரே சமயத்தில் கீழே விழும்படி எறியின் அதிக நிறையுள்ள பொருளே முதலில்விழும்என்று கிரேக்கப் பேரறிஞரான அரிஸ்டோட்டல் கூறியிருந்தார் இக்கருத்துதவறானது என்று கலிலியோ கலிலி கூறினார். ஒரு நாள் இவர் பீஸா கோபுரத்தின் சிகரத்தை அடைந்துசமநிறை அற்ற பொருள்கள் இரண்டை ஒரே நேரத்தில் கீழே போட்டார். அங்கு கூடி நின்ற மக்களுக்கு இரண்டு பொருள்களும் ஒரே தருணத்தில் தரையில் விழுவதைக் காட்டி பழைய கோட்பாடு பிழையென நிரூபித்தார். இதுபோன்றே பழைய கோட்பாடுகள் பல தவறானவை என்பதைநிரூபித்தவர்களில் இவரும் ஒருவராவார்

கலிலியோ கலிலி நுணுக்கமான விஞ்ஞான ரீதியில் அமைந்த தொலை நோக்கியை உருவாக்கி அதனுதவியுடன் ஆகாயத்தில் காணப்பட்டபொருள்கள் பற்றி அரிய தகவல்களை சேகரித்தார். பூமி சூரியனைச்சுற்றி வருகின்றதென கொபர்நிகஸ் கூறியதற்கு பரிசோதனைகள் மூலம் கலிலியோ கலிலி அக்கோட்பாட்டை நிரூபித்தார் 1632 இல் இவர் எழுதிய வானியல் சாஸ்திரம் என்றநூலில் கூறப்பட்ட கோட்பாடுகளுக்கு கிறிஸ்தவ மதகுருமார் எதிர்ப்பு தெரிவித்தனர். இவர் இதற்கு பணியாததால் நாடு கடத்தப்பட்டார்,

## (4) லியனார்டோ டாவின்சி கி. பி 1452-1519

லியனார்டோ டாவின்சி இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவர் கி.பி 1452ஆம் ஆண்டில் வின்சி என்ற நகரத்தில் பிறந்தார் இவர் இளம் பராயத்தில் பிரசித்தி பெற்ற இத்தாலிய ஓவியர் ஒருவரிடம் ஓவியக்கலை பயின்றார் இவர் தமது 20 வயதில் பிரசித்தி பெற்ற ஓர் ஓவியக்கலைஞரானார், இத்தாலியில் உள்ள

பெரும் கீர்த்தி பெற்றார். இவர் ஓவியக் கலையிலும் வானியலிலும், தாவரவியலிலும், விலங்கியலிலும் உடல் உறுப்புகளைப் பிளந்து ஆய்வு செய்வதிலும் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார்.

ஆகாய விமானம் பற்றிய எண்ணக் கருத்துக்கள் எள்ளளவேனும் நிலவாதஅக்காலத்தில் ஆகாய விமானம்போன்ற சித்திரம் ஒன்றை வரைந்தார் இத்தருணத்தில் ஹெலிகொப்டர் பற்றிய அடிப்படைக்

ங்கள் உலகின் சிறந்த கலையாக்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவரது ஓவியங்களுள் மோனா விஸா, வேர்ஜின் ஒஃப் தரொக்ஸ் என்றழைக்கப்படும் இரு ஓவியங்களும் பெரும் புழுகக்குப் பாத்திரமாயுள்ளன

ஆக்கம்-

**அ.கிரிதரன்**
ஆசிரியர்
யா/யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை


### பிற்போடல்

கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையத்தினால் 07-08-94 - ல் நடாத்தப்படவிருந்த பரிசுச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 21-08-94 இற்கு பிற்போடப்பட்டுள்ளது.

நிர்வாகிகள்

அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(9042)



சுவாமி விவேகானந்தரின்
சிகாகோ நூற்றாண்டு நிகழ்வு

### இலவச கண் சிகிச்சை முகாம்

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன்
நடாத்தும்
இலவச கண் சிகிச்சை முகாம்

14- 8- 94 ஞாயிறு புலோலி அரசினர் ஆதார வைத்தியசாலையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

செயலாளர்
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

முக்கிய குறிப்பு:- ஏற்கனவே பதிந்த 50 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இவர்கள் திரும்பவும் பதிய வேண்டியதில்லை.

(9046)



பரிசு

நல்லூர்த் திருவிழாவில் நடைபெறவுள்ள

### தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்

வினாவிடைப் போட்டி

போட்டியில் கலந்து கொள்வதன் மூலம் நீங்களோ அந்த தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

பல சுற்றுக்களாக நடைபெறவுள்ள இப்போட்டியில் சுற்றுக்களில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு

★ வெற்றிக் கேடயங்கள்
★ பெறுமதிமிக்க பரிசில்கள்
★ சான்றிதழ்களும்

வழங்கப்படும்

தமிழீழத்தின்

★ பௌதீகச் சூழல் ★ வளர்ச்சி
★ பௌதீக வளம் ★ வரலாறு
★ குடித்தொகை ★ அரசியல்
★ பொருளாதார அமைப்பு ★ தமிழீழ சட்டம்

ஆகியன பற்றியதாக கேள்விகள் அமையும்.

போட்டிக்கான விதிகள்:

★ 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.
★ தமது விண்ணப்பங்களை கல்லூரி அதிபர் அல்லது கிராம சேவை அலுவலர் அல்லது கிராமிய உற்பத்திக்குழுத் தலைவர்களைக் கொண்டு உறுதிப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.
★ விண்ணப்ப முடிவுத் திகதி 15-8-1994
★ விண்ணப்பங்களை

"தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்"
உட்கட்டுமானப்பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
இல. 10, சம்பியன் வீதி,
கொக்குவில்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

★ இதற்கான விண்ணப்பப் படிவங்களை சகல புத்தக சாலைகள், கிராமிய உற்பத்திக் குழு அலுவலகங்கள், உட்கட்டுமானப்பகுதி ஆகிய இடங்களில் 5/- ரூபா செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்;

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-10066)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.



சிந்தனைக்கு..

அறிந்தவனுக்கு அறிவுரை கூறத் தேவையில்லை;
அறியாதவனுக்கு அறிவுரை கூறிப் பயனில்லை,
ஸொனகா.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 08-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# டி.பியின் போக்கு நல்ல அறிகுறியல்ல

எதிர்வரும் 16-ம்திகதிஇடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியுற்றாலும் அது இலகுவில் ஆட்சி அதிகாரத்தை விட்டு இறங்கிச் செல்லாது போன்றே தெரிகின்றது. குறைந்த பட்சம், அரசியலமைப்பு நெருக்கடியையாவது உருவாக்கி ஆட்சியை தனது கைகளில் வைத்துக் கொள்ளவே ஐ.தே. கட்சி முனையும் என்பது போலவே அதன் அறிவிப்புக்கள், நடவடிக்கைகள் உள்ளன.

இதன் முதற்கட்டமாகவே பொது ஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றால், சிறிமாவோ பண்டாரநாயக்காவையே பிரதமராகப் பதவி ஏற்க அழைப்பேன் என்ற ஜனாதிபதி டி.பியின் அறிவிப்பைக்கொள்ள வேண்டியுள்ளது. இது அரசியலமைப்பில் உள்ள தமக்குச் சாதகமான ஒருசரத்தைப் பயன்படுத்தி சந்திரிகாவை பிரதமர் பதவியில் ஏறவிடாமல் தடுக்க அவர் எடுத்த முயற்சியாகும்.

அதேசமயம் சந்திரிகா குமாரணதுங்காவிற்கும்- சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும் இடையில் அதிகாரப் போட்டி தொடர்பாக ஒரு முரண்பாட்டைத் தோற்றுவிப்பதும், அதன் மூலம் சந்திரிகா மீதோ, சிறிமா மீதோ மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதே டி.பி. விஜேதுங்காவின் திட்டமாகும்.

ஆனால், அப்பிரச்சினையை சிறிலங்கா சுதந்திரக் கட்சி சுலபமாக தாண்டி விடக் கூடும். இதற்கு ஏற்றால் போல் தேர்தலில் வெற்றி பெற்றால், சந்திரிகாவே பிரதமராவார்என்றும் கட்சித் தலைமைப்பதவி அவருக்கு விட்டுக் கொடுக்கப்படும் எனவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.

இந்நிலையில் தான் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து டி பி. விஜேதுங்கா அறிவித்துள்ளதாகத் தெரிகின்றது. இவ் அறிவிப்பானது சுதந்திரக்கட்சியையோ அன்றி பொது ஜன ஐக்கிய முன்னணியையோ மட்டும் மிரட்டுவதாக இல்லை. வாக்காளர் அனைவரையுமே மிரட்டுவதாகவும் உள்ளது.

'எதிர்வரும் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் அமைச்சரவை அமைக்கப் போவது எனது அனுமதியின் பின்னர் தான். பாராளுமன்றம் புதிதாக அமைக்கப்பட்டாலும் முப்படைகளும், பொலிசாரும் எனக்குக் கீழேயே

# இனப்பிரச்சினை தீர்வுக்கான சூழ்நிலையை அரசு தவறவிட்டது

- சந்திரிகா குமாரணதுங்க

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண சாதகமான சூழ்நிலை நிலவிய போது அரசாங்கம் அதனை உதாசீனம் செய்துவிட்டு 1983-ம் ஆண்டில்யுத்தத்தை ஆரம்பித்தது. அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட யுத்தம் இன்று வரை நீடித்துக் கொண்டே இருக்கிறது. இந்த யுத்தத்தால் எல்லாத் தரப்பு மக்களுமே இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு மேல் மாகாண முதல்வரும், பொது ஜன ஐக்கிய முன்னணியின் பிரமுகருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்க கூறியுள்ளார்.

மாத்தளை பேனாட் அலுவிகார அரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டை பிரிக்க இடமளிக்க மாட்டேன் என்று செல்லும் இடங்களிலெல்லாம் பேசிவருகிறார் ஜனாதிபதி. ஆனால் இந்த நாடு 1983-ம் ஆண்டு முதலே இரண்டு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. 1983-ம் ஆண்டு முதல் இன்றுவரை எம்மால் வடபகுதிக்குசென்று வர முடியாமல்உள்ளது இனப்பிரச்சினைக்கும், யுத்தத்திற்கும் தீர்வைக்காண அரசாங்கம் விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண முற்பட்ட தமது கணவர் விஜய குமாரணதுங்க சுட்டுக் கொல்லப்பட்டமையையும் அவர் நினைவு கூர்ந்தார்.

## அரசியலில் ஈடுபட சிறிமானி எண்ணவில்லை

(கொழும்பு)

அரசியலில் இறங்க வேண்டும் என நான் நினைத்திருக்கவில்லை. ஆனால் என் கணவரைப் பின்பற்றி நம்பிவந்த இலட்சக்கணக்கான மக்களை அநாதைகளாக விட நான் விரும்பவில்லை. இதனாலேயே அரசியலில் இறங்கினேன் என சிறிமானி அத்துலத் முதலி தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கியமுன்னணியின் சார்பில் தங்கொட்டுவவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர், ஊழல் நிறைந்த ஐ. தே. க. கொலைகளை செய்கின்றது. இந்த அரசின் அட்டூழியத்தை இளம் சந்ததி நன்கறியும். என் கணவர் அன்று ஐ. தே. கவை திருத்த முயன்ற போது மந்திரிப்பதவியிலிருந்தும்கட்சியிலிருந்தும் நீக்கினர் எனவும் குறிப்பிட்டார்.

## தொழில்நுட்பமாணவருக்கு மகாபொல புலமைப்பரிசில்

(சோழுப்பு)

நாட்டில் உள்ள தொழில்நுட்பக்கல்லூரிகளில் பயிலும் 10 சதவீதமான மாணவர்களுக்கு அடுத்தாண்டு முதல் மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்படும் என உயர்கல்வியின் தொழில்நுட்பக் கல்விக்கான பணிப்பாளர் நாயகம் கூரே தெரிவித்துள்ளார்.

1991இல் நாட்டில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் 50 சதவீத கல்வித்துறைசார் ஊழியர்கள் 50 சதவீத பணியணியினரும் இருந்தனர். அடுத்தவருடம் 476 பேருக்கு புதிதாக நியமனம் வழங்க திறைசேரி அங்கீகாரம் அளித்துள்ளது. மேலும் 90 விரிவுரையாளர்களையும் 100 தரம் இரண்டு விரிவுரையாளர்களையும் நியமிக்க திறைசேரி அனுமதித்துள்ளது.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்க்கான சகாயப் பணம் அடுத்தவருடம் முதல் 2500 ரூபாவாக அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பரீட்சை நிலையங்கள் மேற்பார்வை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வட்டத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை நடைபெற்று வரும் நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் வலயம் 1 கல்விப்பணிப்பாளர் நேரடியாக சென்று மேற்பார்வை செய்து வருகிறார். (88)

## மிதிவண்டிகள் இன்னும் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்- கல்வித்திணைக்கள ஊழியர்கள் மற்றும் கோட்ட ஊழியர்கள் பிரிவு வாரியாக தமது பெயர்ப்பட்டியல்கள் துவிச்சக்கர வண்டிக்காக அனுப்பப்பட்டு நீண்ட நாட்களாகியும்துவிச்சக்கர வண்டி கிடைக்காததால் கவலையடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (88)

## பாக். அணியை சிறிலங்கா 7விக்கெட்டுகளால் வென்றது

(கொழும்பு)

சிறிலங்கா அணிக்கும், பாகிஸ்தான் அணிக்கும் இடையில் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் சிறிலங்கா அணி 7 இலக்குகளால் பாகிஸ்தான் அணியை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. சலீம் மாலிக் 61 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை அணி சார்பில் ரூவான் கல்பகே 36 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலளித்தாடிய சிறிலங்கா அணி 47. 2 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. சஞ்சீவ ரணதுங்க 70 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் சிறந்த ஆட்டக்காரராகவும் இவர் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்

# சைவ சித்தாந்தம் என்பது தமிழினத்தின் சொத்து

- பேராசிரியர் நீ. மரியசேவியர்

(குருநகர்)

''தமிழர் கலை பண்பாட்டுக்கு அமைய சொந்தமான ஒரு சமய கோட்பாட்டை புதிதாக உருவாக்கி பேணப்பட வேண்டும்''

இவ்வாறு கேட்டுக் கொண்டார் திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் வண நீ. மரியசேவியர் அடிகளார்.

கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ் பிரதான வீதி திருமறைக் கலா மன்ற கேட்போர் கூடத்தில் ஆரம்பமான சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தின் ஐந்தாமாண்டு நிறைவு வைபவத்தின் போது விளக்கமளித்து பேசுகையில் அவர் இவ்விதம் கேட்டுக் கொண்டார்.

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தலைமையில் சைவ சித்தாந்த ஆய்வு வட்டக் கருத்தரங்கு நடைபெற்றது.

பேராசிரியர் வண நீ. மரிய சேவியர் அடிகள் மேலும் கூறியதாவது ;

''திருமறைக் கலா மன்றம் சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தை இயக்குவது பற்றிய தவறான பார்வையை கத்தோலிக்கரும், சைவ சமயத்தினரும் கொண்டுள்ளனர்.

சித்தாந்தம் என்பது தமிழ் மக்களுடைய பாரம்பரிய சொத்துக்களுள் ஒன்றாகும். சித்தாந்தத்தின் மூல வாதம் என்றதும் கிரேக்கத்தை நினைப்போம். நவீன சூனிய வாதம் என்னும் போது ஜேர்மனியை எண்ணுவோம்.

பரதநாட்டியத்தை தென்னகத்துடனும் கதகளியை கேரளத்துடனும், குச்சுப்புடியை ஆந்திராவுடனும், மணிப்புரியை அஸ்ஸாமுடனும் ஒருங்குசேரக் கருதுவது போல் சித்தாந்தம் என்றவுடனே தமிழினத்தின் தனித்துவமான சொத்து என்ற முறையில் நமது பண்பாட்டை எண்ணுவோம்.

அதை நாம் மெய்யியல், இறையியல் நோக்கில் உள்ளார உணர்த்துவதற்கு முனைகிறோம். எந்தச் சமயத்தையும் விமர்சிப்பதோ, திறனாய்வு செய்வதோ எமது நோக்கமல்ல

சமண மத இலக்கியமான ''சிந்தாமணியையும்'' பௌத்தமத இலக்கியமான ''மணிமேகலை'' யையும் இன்னும் இதுபோன்ற பல்வேறு இலக்கிய சமய வரலாற்று நூல்களையும் தமிழில் பேணி அது நமது இலக்கியம், வரலாறு என்போமெனில் சைவ சித்தாந்தமும் அவ்வாறு நோக்க வேண்டிய ஒன்று தான்'' இவ்வாறு அவர் கூறினார்.

திரு. வே. யுகபாலசிங்கம் எம். எ, ''திருக்களிற்றுப்படியார்'' என்னும் பொருளில் கருத்துரை வழங்கினார்.

மன்றச் செயலாளர் திரு. வி. ஜே. கொன்ஸ்ரன்ரைன் நன்றி கூறினார். (21)

## 'முழங்கும் முரசு' மேடையேறுகிறது

திருநெல்வேலிக் கலைக் கோயில் கீழைத்தேய நடன, ஈழத்து நாட்டாராடல் நிறுவகத்தின் வளர்ச்சிப் பணிக்காக கலைஞர் வேல் ஆனந்தன் ஆடல் அணியினர் அளிக்கும் ''முழங்கும் முரசு'' ஆடற்கதை இன்று பிற்பகல் நான்கு மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது. உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

## ஆடிப்பூரம்

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு சிறீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் ஆடிப்பூரவிழா விசேட ஆராதனை பூசைகளுடன் சிறப்பாக நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## அமைச்சர் எவரையும் நாம் தெரிவு செய்யவில்லை

சுதந்திரக் கட்சி செயலாளர்

(கொழும்பு)

அமைச்சரவை அமைச்சர் தொடர்பாக எந்த ஒருவரையும் இதுவரை தெரிவு செய்யப்படவில்லை ... முன்னணி வெற்றி பெறும் என்றும் அதனை தொடர்ந்து பிரதமர் பதவி சந்திரிகா குமாரணதுங்காவுக்கு வழங்

அமைச்சரவை அமைக்கப் போவது எனது அனுமதியின் பின்னர் தான். பாராளுமன்றம் புதிதாக அமைக்கப்பட்டாலும் முப்படைகளும், பொலிசாரும் எனக்குக் கீழேயே செயற்படவுள்ளனர். பாராளுமன்றத்தில் தீர்மானிக்கப்படும் சகல சட்டங்களையும் பரிசிலனை செய்து அதற்கான அங்கீகாரத்தை வழங்க வேண்டியவன் நானே'. இதுவே ஜனாதிபதி டி,பி, விஜேதுங்கா விடுத்துள்ள எச்சரிக்கையாகும்.

டி பி. விஜேதுங்காவின் இவ் எச்சரிக்கையைப் பார்க்கும் போது பொது ஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றாலும் என்னை மீறி எதையும் செய்து விட முடியாது. செய்து விட அனுமதிக்கப் போவதில்லை என்பதை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

டி.பியின் இவ் அறிவிப்பானது அரசியலமைப்பை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மக்களின் விருப்பத்தை நிராகரிக்கும் செயல் என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு மக்களின் எத்தீர்ப்பும் என்னை ஒன்றும் செய்துவிடாது என்பதும் ஆகும். ஆனால் டி.பி. விஜேதுங்காவின் இந்நிலைப்பாட்டின் விளைவானது சிறிலங்காவில் முன் எப்பொழுதும் இல்லாதவாறு அரசியல் வன்முறைக்கும், இதன் காரணமாக இரத்த ஆறு ஓடுவதற்கும் வழிவகுக்குமே ஒழிய ஒருபோதும் சிறிலங்காவிற்கு நன்மை பயக்கப் போவதில்லை.

சிங்கள அரசியல் வாதிகளைப் பொறுத்து அவர்கள் எப்பொழுதும், அரசியலமைப்பைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளார்களே ஒழிய அரசியலமைப்பை பேண வேண்டும் என்றோ அதற்கு ஏற்றாற் போல் நடக்க வேண்டும் என்றே விரும்பியதுமல்ல. செயற்பட்டதும் அல்ல. ஆனால் தமக்கு தேவை ஏற்படும் போது மட்டும் அரசியலமைப்பில் உள்ள ஓட்டைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளனர். இதில் சிங்களத்தலைவர்கள் கட்சி பேதமின்றி நடந்து கொண்டுள்ளனர்.

இதன் வெளிப்பாடாகவே சுமார் 45 வருட காலத்திற்குள் அரசியலமைப்பு மூன்று தடவை மாற்றத்திக்கு உள்ளாக வேண்டி வந்ததோடு அரசியலமைப்பு திருத்தச் சட்டங்கள் பெருமளவில் நிறை வேறியும் வந்தன. இதே போன்றே அரசியலமைப்பில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற மனிதனின் அடிப்படை உரிமை மீறல் சட்டங்களையும் அதனால் உருவாக்க முடிந்தது.

ஆனால் டி.பி. விஜேதுங்கா தான் எச்சரித்திருப்பது போல் நடவடிக்கை மேற்கொள்வாரேயானால் பாராளுமன்றத்திற்கும் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் இடையில் உருவாகும் மோதலானது இவை யாவற்றிற்கும் சிகரம் வைத்தால் போல் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதுவரை சிறிலங்கா சந்திக்காத அரசியல் அமைப்பு நெருக்கடியை மட்டுமல்ல, சிறிலங்காவில் அமைதியின்மையையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

---

கிடைக்காததால் கவலையடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (88)

---

சலீம் மாலிக் 61 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை அணி சார்பில் ருவான் கல்

---

# க. பொ.த மாணவர்களுக்கு கடலக வளப் பயிற்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன, கடல்வள அபிவிருத்தி பகுதியினரால், க. பொ. த. (சா.த) பரீட்சையில் கடலகவள பாடத்திட்டத்திற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான, பயிற்சி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியின் ஆரம்ப விழாவும், பதிவு செய்யும் நடவடிக்கைகளும் எதிர்வரும் புதன்கிழமை காலை 10.00 மணியளவில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலக கேணல் கிட்டு அண்ணா நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியை: தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்தி பகுதியினர், தமிழீழ கல்விக்கழகம், யாழ் பல்கலைக்கழகம். வெளிக்கள நிலையம், யாழ்பிரதேச செயலகம், வடமாகாண கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் ஆகியவற்றுடன் இணைந்து ஒழுங்கு செய்துள்ளனர்-

இப்பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 13-ம் திகதி தொடக்கம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், யாழ் கூட்டுறவு பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கடல்வள பாடத்திட்டத்திற்கு விண்ணப்பித்த அனைவரும், இப்பயிற்சி நெறியில் பங்குபற்றி பயனடையுமாறு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்கேட்டுள்ளது.

# தொடர் செயலமர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட தொலைக்கல்வி, பயிலுநர் ஆசிரியர்களுக்கான ஐந்து நாட்கள் தொடர் செயலமர்வு யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று காலை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதலாம், இரண்டாம் கல்வியாண்டுகளில் ஆங்கிலப் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்காக மேற்படி செயலமர்வு இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (86)

# திருடர்களின் தொல்லை கிளாலியில் அதிகரிப்பு

கிளாலிப்பகுதியில் திருடர் தொல்லை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இரவு நேரங்களில் படகு ஊடாக தங்கள் பிரயாணத்தை மேற் கொள்ளும் பிரயாணிகளிடம் இந்த திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (88)

# இன்றைய தி. மு. க. கருணாநிதியின் குடும்பமே

எஸ். டி. சோமசுந்தரம்

(சென்னை)

தி. மு. கவில் கருணாநிதியையும், அவரது குடும்பத்தவரையும் தவிர வேறு எவரும் இப்போது இல்லை. இவ்வாறு அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்தார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், கருணாநிதி தன்னை உண்மையான திராவிட இயக்கத்தை சேர்ந்தவன் என்று சொல்ல ஆரம்பித்து இருக்கிறார். அப்படிச் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏன் வந்தது? தான் திராவிட இயக்கத்துக்காரன் என்ற சந்தேகம் அவருக்கு வந்து விட்டதா? அதனால் தான் உண்மையான திராவிட இயக்கத்தவர் தானே என்று ஆரம்பித்துள்ளார். ஆனால் பேரறிஞர் அண்ணா ஆரம்பித்த தி. மு. கவிலிருந்து திராவிட இயக்கத்தவர். அண்ணாவின் மறைவுக்குப் பின் வெளியேறிக் கொண்டே இருக்கின்றனர். கருணாநிதியையும், அவரது குடும்பத்தினரையும், குடும்பநண்பர்களையும் மட்டுமே கொண்ட இயக்கமாக தி. மு. க. இப்போது மாறிவிட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

# பயிற்சி வகுப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்திய 09 மாத கால பொது விவசாயப் பயிற்சியை முடித்து வெளியேறிய மாணவர்களில் விலங்கு வேளாண்மைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு காமதேனு கால்நடைப்பண்ணையில் வைத்து காளை மாடுகளுக்கு நலமடித்தல் சாதனா பயிற்சி(Castration) 17.07.94 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியை மேற்கொள்வதால் வளர்ப்புக்கு உகந்ததல்லாத கிடாய் மற்றும் காளை மாடுகளை நலமடித்து வளர்ப்பதற்கு பண்ணையாளருக்கு உதவியளிப்பதுடன் விலங்கு வேளாண்மையில் நல்லின விருத்தியை மேற்கொள்வதற்கும் வழிவகுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

---

(கொழும்பு)

அமைச்சரவை அமைச்சர் தொடர்பாக எந்த ஒருவரையும் இதுவரை தெரிவு செய்யப்படவில்லை என்றும் தேர்தல் முடிவடைந்த பின்னரே அமைச்சரவை உறுப்பினர் பெயரை தாம் வெளியிடுவதாக சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

எதிர் வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெறும் என்றும் அதனை தொடர்ந்து பிரதமர் பதவி சந்திரிகா குமாரணதுங்காவுக்கு வழங்குவது தொடர்பாக மட்டுமே கட்சி இதுவரை முடிவு செய்துள்ளது. எனவே ஏனையவர் தான் அமைச்சரவையில் இடம் பெறுவதாக உங்களுக்கு உறுதி அளித்தால் இது உண்மைக்கு புறம்பானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேர்தலன்று தொடக்கம் ஒரு வாரத்திற்கு ஊரடங்கு

## கலவரத்தை தடுக்க நடவடிக்கையாம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் நடைபெறும் தினத்திலும் அதன் பின்பும் தெற்கில் இரு பிரதான கட்சிக் குழுக்களுக்கிடையில் கலவரம் நிகழலாம் என அரசாங்கம் எதிர்பார்ப்பதால் தேர்தல் தினமான 16ஆம் திகதி இரவிலிருந்து ஒரு வாரத்திற்கு தென் பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்ய அரசு எண்ணியிருப்பதாக அறியப்படுகின்றது.

ஆளும் ஐ. தே. கட்சி ஆதரவாளர்களினால் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து தாக்கப்படுகின்றனர்.

அரசாங்கத்தின் ஆதரவுடன் செயல்படும் சிலர், எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியினர் மீது கடுமையான தாக்குதலில் ஈடுபடுகின்றனர்.

தேர்தல் தினமான 16ஆம் திகதி இரு பிரதான குழுக்களுக்கிடையிலும் பெரும் கலவரம் நிகழலாம் என பொலிஸ் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

தேர்தலின் முடிவை அடுத்து மிகவும் பாரதூரமான அளவில் காடையர் கோஷ்டியினர் தெற்கில் வன்செயலில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது சட்டம், ஒழுங்கு பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக அமையலாம் என பொலிஸ் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. இதனால் தேர்தல் தினமான 16ஆம் திகதி இரவிலிருந்து தேர்தல் முடிவுகள் தொகுதி வாரியாக அறிவிக்கப்பட்ட பின்னரும் ஊரடங்குச் சட்டத்தை அமுலில் வைத்திருப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக கொழும்புச்செய்திகள்தெரிவிக்கின்றன

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 08. 08**

**திங்கள் இரவு**

08. 01 - தளிர்கள்
08. 20 - செய்திச்சரம்
08. 30 - செய்திகள்
08. 40 - தரிசனம் - யாழ் மத்திய கல்லூரி 175- வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ் மத்திய கல்லூரி அதிபர் நா. க. சண்முகநாத பிள்ளை அவர்களுடனான செவ்வி

**1994. 08. 09**

**செவ்வாய் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப் பாடல்கள்.

# எதிரியைஎந்தஇடத்திலும் தாக்கமுடியும் கரும்புலிகளின் தாக்குதல் நிரூபிக்கிறது

## நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா உரை

''எதிரியை எந்த இடத்தில் வைத்தும் புலிகளால் தாக்க முடியும் என்பதையும் எதிரிகளால் எந்த இடத்திலும் நிம்மதியாக இருக்க முடியாது என்பதையும் பலாலிப் படைத்தளம் மீதான கரும்புலிகளின் தாக்குதல் உணர்த்தியிருககிறது.''

இவ்வாறு பலாலிப் படைத்தளத்தாக்குதல் வெற்றியின் நினைவாகவும், இத்தாக்குதலில் வீரச்சாவடைந்த கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் நேற்று கோண்டாவில் டஸ் டிப்போவுக்கு முன்பாக உள்ள மைதானத்தில நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழீழ நீதிநிர்வாக துறைபொறுப்பாளர் திரு பரா கூறினார்.

பெருமளவு மக்கள் திரண்டிருந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது எமது ஒவ்வொரு கரும்புலித்தாக்குதல்களும் எதிரி நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு எதிரிக்கு அழிவுகளையும் அதிர்ச்சிகளையும் கொடுத்து வந்துள்ளது. எதிரிகளின் பலம் பொருந்திய படைத்தளங்களின் அடித்தளம் வரை சென்று தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இக் கரும் புலிகள் எந்த இலட்சியத்துக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தார்களோ அந்த இலட்சியத்தை அடைவதற்காக தமிழீழ மக்களாகிய நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தொடர்ந்து இச்கூட்டத்தில் பெண்கள் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி மாலினி உரை நிகழ்த்தினார். இவர் தனது உரையில் எதிரியின் வேட்டுச் சத்தங்கள் எமது வீட்டுக் கதவைத் தட்டும் வரை காத்திருக்காமல் கரும் புலித் தாக்குதலின் அதிர்வுகள் உங்கள் இதயத்தை தொடுகின்ற இவ் வேளையில் நீங்கள் அனைவரும் எதிரிக்கு எதிரான போருக்குப் புறப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

''இன்று உலகில் கரும்புலிகள் படையணி ஒன்றைக் கொண்டிருக்கும் ஒரேயொரு பூமி தமிழீழம் தான். இக் கரும்புலிகளின் காலத்தை சோழர் காலத்துக்கு பிறகு முத்திரை பதித்த வரலாற்றுக் காலம் என்று கூறலாம்'' இவ்வாறு இக் கூட்டத்தில் உரையாற்றிய கடற் புலிகளின் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு வாஞ்சிநாதன் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும் போது சிங்கத்தின் குகைக்குள் சென்று தாக்குதல் நடாத்தக் கூடிய கரும்புலிகளின் படையணி காரணமாக சிறிலங்காவின் அனைத்துப் படை முகாம்களின் படைகளும் உளவியல் ரீதியாக உடைந்து போயுள்ளன என்றும் தெரிவித்தார்.

### ஆசிரியருக்கான தொடர்செயலமர்வு

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி பிராந்தியத்தில் பயிற்சி பெறும் கல்வி ஆண்டு 93-95, 91, 93 ஆங்கிலம் பயிற்சி ஆசிரியருக்கான தொடர் செயலமர்வு இன்று முதல் இடம் பெறவுள்ளதால் காலை 8 30 மணி முதல் சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்களையும், போதனாசிரியர்களையும் தவறாது சமுகம் தருமாறு சிரேஷ்ட போதனாசிரியர் திரு மு. யோகராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

# சிங்கள அரசின் ஆக்கிரமிப்பை வெறுமனே பார்த்திருக்க முடியாது

## காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

(தென்மராட்சி)

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தனித்துவ தேசிய இனம். தமிழீழம் எங்கள் தேசம். இந்த தேசமும் மக்களும் பன்னெடும் காலமாக பல அன்னிய ஆக்கிரமிப்பு சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டு அடக்கப்பட்டு ஒடுக்சப்பட்டு உரிமைகள் அற்ற நிலையில் இருந்துவருகின்றோம்.

இவ்வாறு நேற்றையதினம் பலாலியில் கரும்புலித் தாக்குதல் நடத்தி வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு தென்மராட்சி மீசாலையில் இடம்பெற்ற வீரவணக்க கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்திய தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்' எமது மக்களையும் பிரதேசத்தையும் ஆக்கிரமித்திருந்த இந்த அன்னிய அடக்குமுறை சக்திகள் எவ்வாறு ஆட்சி புரிந்தன. இந்த ஆட்சி அதிகாரம் சிங்கள பேரினவாதத்தின் கைக்கு எவ்வாறு மாறியது இந்த பேரினவாதம் எங்கள் தேசத்தினையும் மக்களையும் தமது ஆக்கிரமிப்பு இராணுவ, பொலிஸ் படைகளினால் ஆக்கிரமித்து ஒரு இன அழிப்பு நடவடிக்கைகளை எவ்வாறு புரிந்து வருகின்றது என்பதை நீங்கள் நன்கு அறியவேண்டும்.

தமிழீழ மக்களாகிய நாம் எம்மை ஆக்கிரமித்து எமது இனத்தையும் தேசத்தையும் அழிக்கும் சிங்கள அரசையும் ஆக்கிரமிப்பு சக்திகளையும் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது

நாம் ஒருதனித்துவமான இனம் இந்த அழிவுகளில் இருந்து பாதுகாக்கத்தான் மிகவும் நீண்ட நெடிய தூர தொலைநோக்குடன் தீர்க்க தரிசனத்துடன் எமது தேசிய தலைவர் இந்த சிங்களபேரின வாதத்திற்கு எதிராக எமது விடுதலைப் போராட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்

உலகத்திலே இதுவரை எந்த ஒரு போராட்டத்திலும் நடந்திராத வகையில் புதுமை மிக்க ஒரு பலம் பொருந்திய தொரு தேசிய விடுதலை இயக்கத்தினை கட்டி எழுப்பி எமது மக்களையும் தேசத்தையும் இவ்வாறு அழிவில் இருந்து பாதுகாத்துவருகின்றார் என்றார் (86)

# வரலாற்றில் கரும்புலித்தாக்குதல் பெரும் சம்பவங்களாக இடம்பெறும்

## -பாலகுமாரன்

(தென்மராட்சி)

வரலாற்றிலே எமது போராட்டத்தில் கரும்புலித் தாக்குதல்கள்ஒருபாரியதிருப்பு முனைகளாகவும் வரலாற்றின் பெரும் சம்பவங்களாகவும்திகழும். இன்றைக்கு இல்லாவிடினும் சில காலங்களுக்குப் பின் வரலாற்றின் பக்கங்களாக உங்கள் கண் முன்னே திகழும்.

இவ்வாறு தென்மராட்சிக் கோட்டத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற புலாலி...

தொடர்ந்து பேசுகையில், கரும்புலிகளின் ஈகம், கொடை, வீரம், துணிவு - எந்தநிலையிலும்இடிஇடித்தாலும் திட்டமிட்ட முறையிலேயே செயல்செய்யும் பாங்கு என்பவற்றை எங்கும் காணக் கிடையாது.

சிங்கள அடக்குமுறை என்கின்ற ஒரு பெரிய பாறாங் கல்லை மக்களுடைய ஆதரவு பலத்திலே தள்ளித் தள்ளி ஒரு நிலைக்கு கொண்டு வந்து விட்...

...வுப் பாதைக்குத் தள்ளுவதற்குஎங்கள் எல்லோருடைய பலம் வேண்டும் என்றார்.

### அலங்கார உற்சவம்

யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவங்கள் வரும்11-ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் பதினொரு நாட்களுக்கு மாலை 3. 30 மணி...

### யுத்தத்தின்

இதில் விசேட விருந்தினராக கலந்துகொண்ட ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா கருத்து தெரிவிக்கையில் வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பான தனது முடிவில்...

# 2030-ல் உலக சனத்தொகை இரட்டிப்பாக அதிகரிக்கும்

## உலகவங்கி அறிவிப்பு

2030-ம் ஆண்டில் உலக மக்கள் தொகை இரட்டிப்பாக அதிகரிக்கும் என்றும், அப்போது 850 கோடிப்பேர் உலகில் இருப்பார்கள் என்றும் உலகவங்கி கூறியுள்ளது.

பெரும்பாலான மக்கள் தொகை அதிகரிப்பு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலேயே இருக்கும் என்றும், மிக ஏழை நாடுகளில் 70 சதவீதமாக அதிகரிப்பு இருக்கும் என்றும் மேலும் கூறப்படுகிறது. ஒவ்வொரு 12 ஆண்டுக்கும் 100 கோடி மக்கள் அதிகரிப்பார்கள்.

அடுத்த 35 ஆண்டுகளில் ஆபிரிக்காவிலேயே அதிக மக்கள் தொகை வளர்ச்சியிருக்கும். இதையடுத்து முறையே மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா, ஓஷானியா, வட அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் மக்கள் அதிகரிப்பு இருக்கும்.

ஓமான், நைகர், ஏமன், எதியோப்பியா, அங்கோலா ஆகிய 5 நாடுகளில் மக்கள் தொகை அதிகரிப்பு உலகின் மிக வேகமானதாக இருக்கும்.

2030-ம் ஆண்டில் சீனாவில் 150 கோடி மக்களும், இந்தியாவில் 93 கோடி 40 லட்சம் மக்களும் இருப்பர். அமெரிக்காவின் மக்கள் தொகை 26 கோடியே 30 லட்சத்திலிருந்து 32 கோடியே 80 லட்சமாக உயரும். இந்தோனிஷியா 2030-ம் ஆண்டில் 27 கோடியே 40 லட்சம் மக்களையும் பிரேஷில் 23 கோடியே 15 லட்சம் மக்களையும் கொண்டிருக்கும்.

### ஓட்டோவை

இல்லாத பகுதியில் வைத்து இனம் தெரியாதோரால் வழி மறிக்கப்பட்டது. ஓட்டோ சாரதி சாதுரியமாகஓட்டிதப்பிவந்துவிட்டார் எனவும் இரண்டாவதாக வந்த ஓட்டோ மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த பெண்களிடமிருந்து சுமார் மூன்று லட்சம் பெறுமதியான பணம், நகை என்பன கொள்ளையடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து தொடர்ந்து ஓட்டோக்கள் வரத் தொடங்கியதும் கொள்ளையர்கள் ஓடித் தலைமறைவாகிவிட்டதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பான விசாரணையில் காவல்துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (86)

### வன்முறை

வாக்காளர்களுக்கு தமது சொந்தத் தேர்தல் மாவட்டத்தில் தற்போது தங்கியிருக்கும் இடத்திலிருந்தே வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன இதன் மூலம் சுமார் இருபத்தையாயிரம் பேர் வாக்களிக்கவுள்ளனர்.

இவர்களில் அனேகர் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் தாம் புத்தளம், அனுராதபுரம், வவுனியா கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து தமது முன்னைய மாவட்டங்களுக்கான வாக்குகளை அளிக்க இருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

### பாராளுமன்றுக்கு

கூடிய ஆசனங்களை கைப்பற்றும்சமயத்தில்பாராளுமன்றம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நம்பிக்கைக்கு உரியவர் சந்திரிகா குமாரணதுங்காதான்என திட்டவட்டமாக ஜனாதிபதிக்கு அறிவித்துவிட்டது- எனவே அவர் சந்திரிகாவைத்தான்அழைக்க வேண்டும் என தெரிவித்தார்-

எனவே ஜனாதிபதி அண்மையில் இது தொடர்பாக தெரிவிக்கும் கருத்துக்கள் அரசியல் அமைப்புக்கு முரணானது. இது குறித்து பொது ஜன ஐக்கிய முன்னணிதனது முழுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது- ஆட்சி அமைக்கும் கட்சிக்கு பிரதமர் மீது நம்பிக்கை இருக்க வேண்டுமேதவிர ஜனாதிபதிக்கு நம்பிக்கையோ ஏனைய கட்சிகளின் அபிப்பிராயம் தேடப்படுவதோ மிகவும் வேடிக்கைக்கான விடயம்-

ஆட்சி அமைக்கும்கட்சி இப்படி ஒருவரை தெரிவு செய்ய தவறும் சமயத்திலேயே ஜனாதிபதி ஏனைய கட்சிகளின் விருப்பம் கேட்கப்பட வேண்டும்- இதுதான் பாராளுமன்ற ஜனநாயக மரபு என்றார்-

ஜனாதிபதிக்கு நம்பிக்கைக்கு உரிய அமைச்சரவை என்பதைவிட பாராளுமன்றத்திற்குநம்பிக்கைக்குஉரிய அமைச்சரவையே தேவையானது என மேலும் அவர் கூறினார்-

### வீரச்சாவெய்திய

ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர்.

### தென்மராட்சியில்

தென்மராட்சியில் மாவீரர்களின் திருவுருவப்படத்தினை தாங்கிய உலங்கு வானூர்தி வடிவிலான ஊர்தி பிரதான வீதி வழியாகமீசாலை நிகழ்வு இடம் பெற்ற இடம் வரை இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வந்தடைந்தது. பின்னர் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான ஈகச் சுடரினை தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் மலர்மாலை அணிவித்து ஈகச்சுடர் ஏற்றி வைத்தனர்.

பின்னர் அஞ்சலி உரை இடம் பெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு. பாலகுமாரன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் தணிகைச்செல்வி, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியில் கலை நிகழ்வும் இடம் பெற்றது. (86

### ஆசிரியர்களுக்கான

ஆசிரியரின்சம்பளம்புதிய சம்பளம்அமைப்பின் கீழ் 3560 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இருபது வருட கால சேவையைப் பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்களுக்கு தற்போதைய சம்பளமான 3960 ரூபா 6200 ரூபா ஆக அதிகரிக்கப்படும்.

### சக்கோட்டைப்

இப்பகுதிக் கடலூடாக வெற்றிலைக்கேணி நோக்கிச் சென்ற கடற்படை இரண்டு மீனவர்களை சுட்டுக்கொன்ற அதே இடத்திலேயே மீண்டும் கடற்படையினர் தாக்கினர். (யோ)

## அலங்கார உற்சவம்

யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவங்கள் வரும் 11-ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் பதினொரு நாட்களுக்கு மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகி 7.00 மணி வரை நடைபெறும். எதிர் வரும் 21-ம் திகதி ஊஞ்சல் உற்சவத்துடன் முடிவடையும்.

முனைகளாகவும் வரலாற்றின் பெரும் சம்பவங்களாகவும் திகழும். இன்றைக்கு இல்லாவிடினும் சில காலங்களுக்குப் பின் வரலாற்றின் பக்கங்களாக உங்கள் கண் முன்னே திகழும்.

இவ்வாறு தென்மராட்சிக் கோட்டத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற பலாலி முகாம் மீதான கரும்புலித் தாக்குதலின் வெற்றி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய திரு. பாலகுமாரன் தெரிவித்தார்.

எந்தநிலையிலும் இடிஇடித்தாலும் திட்டமிட்ட முறையிலேயே செயல்செய்யும் பாங்கு என்பவற்றை எங்கும் காணக் கிடையாது.

சிங்கள அடக்குமுறை என்கின்ற ஒரு பெரிய பாறாங்கல்லை மக்களுடைய ஆதரவு பலத்திலே தள்ளித் தள்ளி ஒரு நிலைக்கு கொண்டு வந்து விட்டோம். இந்தப் பாறாங்கல் திரும்பவும் விழ முடியாது அந்தளவுக்கு அப்பாறாங்கல்லைத் தள்ளியுள்ளோம். ஆனால் இந்தப் பாறாங்கல்லை அவர்களுடைய உச்சிக்கு கொண்டு போய் அவர்களுடைய அழி

ற்குளங்கள் எல்லோருடைய பலம் வேண்டும் என்றார்.

### யுத்தத்தின்

இதில் விசேட விருந்தினராக கலந்துகொண்ட ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா கருத்து தெரிவிக்கையில் வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பான தனது முடிவில் எந்த மாற்றமும் ஏற்படாது என்றும் எனவே படை அதிகாரிகள் அதற்கு ஏற்ப நடந்து கொள்வார்கள் என தான் எதிர்பார்ப்பதாகவும் இதனை அரசியல் பிரச்சினை ஆக்கக் கூடாது என்றும் இது ஓர் பயங்கரவாத பிரச்சினை என்பதை தான் வலியுறுத்திக்கூற விரும்புவதாகவும் கூறினார்.

தெரிவிக்கும் கருத்துக்கள் அரசியல் அமைப்புக்கு முரணானது. இது குறித்து பொது ஜன ஐக்கிய முன்னணி தனது முழுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது- ஆட்சி அமைக்கும் கட்சிக்கு பிரதமர் மீது நம்பிக்கை இருக்க

றார்-

ஜனாதிபதிக்கு நம்பிக்கைக்கு உரிய அமைச்சரவை என்பதை விட பாராளுமன்றத்திற்கு நம்பிக்கைக்குஉரிய அமைச்சரவையே தேவையானது என மேலும் அவர் கூறினார்-

### சக்கோட்டைப்

இப்பகுதிக் கடலூடாக வெற்றிலைக்கேணி நோக்கிச் சென்ற கடற்படை இரண்டு மீனவர்களை சுட்டுக்கொன்ற அதே இடத்திலேயே மீண்டும் கடற்படையினர் தாக்கினர்.

(யோ)

### உலக

மருந்தையோ அல்லது ஊசி மூலம் செலுத்தப்படும் மருந்தையோ கண்டுபிடிக்கவில்லை என்ற உண்மையை நிபுணர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

சென்ற வருடம் மகாநாடு நடைபெற்றதன் பின்னர் உலக நாடுகளில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை 25 லட்சத்திலிருந்து 40 லட்சமாக அதிகரித்துள்ளது என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது எச்.ஐ.வி. வைரசினால் தாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 லட்சத்திலிருந்து ஒரு கோடி எழுபது லட்சமாக அதிகரித்துள்ளது தற்போதைய போக்கு தொடர்ந்து இடம்பெற்றால் 2000-ம் ஆண்டளவில் இத்தொகை இரண்டு மடங்காக அதிகரிக்கும் எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை பாரிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் எயிட்ஸ் நோயை தடுப்பதற்கு தற்போது பயன்படுத்தும் மருந்துகள் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என நடைபெறும் மாநாட்டில் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.


## நான்காம் வருட நினைவலைகள்



அமரர்

**பொன். சிவராஜா [M.A]**

[முன்னாள் பரியோவான் கல்லூரி ஆசிரியர்]

மண்ணில்: 18-07-1950 விண்ணில்: 08-08-1990

ஊருக்கு உற்றவன் உலகுக்கு உத்தமன்
இல்லத்தின் தலைவன் நண்பரின் அன்பன்
எங்கு சென்றிடினும் உன் நாமம்
அழியா இடம்பெறும் கோலம்
கண்டு துயருறும் நாங்கள்
நான்கு வருடங்கள் நாழிகைபோல் ஆக
நாளாந்தம் வருந்தும் நாம்
நாயகன் இன்றி வாடுகின்றோம்
நீங்குமோ எங்கள் துன்பம்
நீங்காது நீங்காது என்றும்.

பாசப்பசியால் வாடும்
- குடும்பத்தினர்

யாழ்ப்பாணம். (9055)



உ

வட்டுக்கோட்டை
கண்ணகி அம்மன் ஆலய
(1008) சங்காபிஷேகம்
(09-08-94 செவ்வாய்க்கிழமை)

## பட்டிமண்டபம்

(இரவு 10 மணி)

பெண்மையின் மாண்பினை பெரிதும் மேன்மைப்படுத்துவது

இராமாயணமா? சிலப்பதிகாரமா?

| | |
|---|---|
| திரு. K. S. முத்துலிங்கம் | திரு. T. வேல்நம்பி |
| திரு. S. வாமன் | திரு. N. விஜயசுந்தரம் |
| திரு. M. ஜெகநாதன் | திரு. K. யோகநாதன் |

நடுவர் திரு. பொன். கணேசமூர்த்தி
(மண்ணுக்காக, சந்தனக்காடு, இலங்கை மண் ஆசிரியர்)

ஆலய பரிபாலனசபையும்,
தொண்டர்சபையும்.

(9057)



## நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தில் விற்பனை நிலையங்களுக்கோர்

# நற்செய்தி

- நல்லை வீதிகளெங்கும் நூற்றுக்கணக்கான தொலைக்காட்சிகள் மூலம் உங்கள் வர்த்தக நிலையங்களின் விளம்பரங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தவும்...
- நல்லை உற்சவ காலங்களில் அங்கு அமைக்கப்படும் வர்த்தக நிலையங்களுக்கு மின்சார ஒளி ஒழுங்குகளைச் செய்து கொள்ளவும்

நாடுங்கள்

# விக்ரர்

5, தேவா வீதி, (BMC லேன்) யாழ்ப்பாணம்

- உங்கள் மங்களகரமான நிகழ்வுகளை மனதிற்குகந்த வகையில் துல்லியமாக என்றும் பார்த்து மகிழ அதிநவீன கமராக்கள் கொண்டு வீடியோ செய்து கொள்ள...
- தமிழீழ எழுச்சிப்பாடல்கள், பக்திப்பாடல்கள் மிக இனிமையான முறையில் பதிவு செய்து கொள்ள...
- உங்கள் பழுதடைந்த இலத்திரனியல் பொருள்களை திருப்திகரமான முறையில் திருத்திப் பெற்றுக் கொள்ள..
- இலத்திரனியல் பொருள்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ள ..

நாடவேண்டிய இடம்

**விக்ரர்** 5, தேவாவீதி, (BMC லேன்) யாழ்ப்பாணம்.

(சி-10072)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.